விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 08 திங்கட்கிழமை (24.08.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 249

## கொரோனா உயிரிழப்பு
## 12ஆக உயர்வு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனாத் தொற்றினால் 12ஆவது மரணம் நிகழ்ந்துள்ளது.
தேசிய தொற்று நோயியல் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த 47 வயதான பெண்ணொருவரே நேற்று உயிரிழந்ததாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

மாவத்தகம, வேஉட பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
குறித்த பெண் இரணவில மத்திய சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு ஐ.டி.எச் 23

## யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளில்
## விசர் நாய் கடித்ததில் இருவர் யாழ்.போதனாவில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் விசர் நாய் கடிக்கு இலக்கான இருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 23

## உழவு இயந்திர சில்லுக்குள் சிக்கி குடும்பஸ்தர் பலி
### சங்கானையில் துயரம்

(அராலி)
மண் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தின் மக்காட்டில் இருந்து பயணித்த 23

## இமையாணனில் வீட்டின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

(கரணவாய்)
வடமராட்சிப் பகுதியில் உள்ள வீடொன் 23

## அரசியலமைப்புச் சட்டத்தின்
# 13வது திருத்தத்தை நீக்க வேண்டும்



### இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர அராஜகம்

*(கொழும்பு)*
*13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட மாகாண சபை முறையை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர அரசாங்கத்திடம் யோசனை முன் வைத்துள்ளார்.* *(23ஆம் பக்கம் பார்க்க)*

## ஹெரோயினுடன் ஆறு பேர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)
ஆவா குழுவைச் சேர்ந்த சந்தேகத்தில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து 60 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ்ப் 23

## காணாமல்போனோர் பணியகத் தலைவர் சாலிய பீரிஸ் பதவி விலகினார்



11

## விக்னேஸ்வரன் பேசியது இனவாதம் சரத் வீரசேகர கண்டுபிடிப்பு

(கொழும்பு)
தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு. தமிழ்தான் 02

## புதிய அரசியலமைப்பை உருவாக்க
## நிபுணர்கள் குழுவை நியமிக்கத் தீர்மானம்

(கொழும்பு)
புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்காக நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்க நீதி அமைச்சர் அலி சப்ரி தீர்மானித்துள்ள 23

## பால் குடித்துவிட்டு உறங்கிய
## 5 மாதக் குழந்தை நேற்று உயிரிழப்பு
### நுணாவிலில் சோகம்

23ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை மகிந்த சந்திப்பார்
### அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)
பிரதமர் மகிந்த ராஜபக்ஷ காணாமலாக்கப்பட்ட உறவுகளைச் சந்திக்க வேண்டுமென தம்மிடம் தெரிவித்ததாக மீன்பிடி மற்றும் கடல்வளத்துறை அமை 23

## மஹாசங்கத்தின் ஆலோசனைப்படியே ஆட்சி – மகிந்த

(கொழும்பு)
மஹாசங்கத்தின் ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளுக்கு மத்தியிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது என 02

## காணாமல் போனோர் இறந்து விட்டனர் – ஹெகலிய



(கொழும்பு)
காணாமல்போனதாகக் கூறப்படுவோர் இறந்திருக்கலாம் என்று நாங்கள் எண்ணுகின்றோம். அவர்கள் உயிருடன் இல்லை என்றே கருதுகின்றோம்.
ஆனால் அதனை உறுதியாகக் 02

# மரண அறிவித்தல்



தோற்றம் 30 - 06 - 1941

மறைவு 23 - 08 - 2020

## மாணிக்கம் அருளானந்தன்

அல்வாய் தெற்கு, கவிஞர் செல்லையா வீதியினை பிறப்பிடமாகவும் அல்வாய் வடக்கு, வீரபத்திரர் கோவிலடியினை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் அருளானந்தன் அவர்கள் நேற்று (23.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தெய்வானை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடேசு - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ஸ்ரீபதியின் அன்புக் கணவரும் அமுதா, அறிவழகன் (பாபு), அருள்மொழி (பிரியா -லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயச்சந்திரன், ரஞ்சினிதேவி, ஸ்ரீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கவித்தூரிகா, மிருதுளன், மஞ்சரி, ஆராதனா (லண்டன்), அக்ஷயா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் அம்பிகைபாகன், காலஞ்சென்ற அழகானந்தன் (முன்னாள் இ.போ.ச. சாரதி - முல்லைத்தீவு), அனந்தராசன் (ஓய்வு பெற்ற இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர் ) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2020) திங்கட்கிழமை காலை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-133)

கவிஞர் செல்லையா வீதி.
அல்வாய்.

தகவல்:-
விவேகானந்தன் கவிச்செல்வம்
( பெறாமகன்)

## அமெரிக்காவுக்குச் சென்ற முதல் தமிழ் மருத்துவர் காலமானார்



(கொழும்பு)

அமெரிக்கா சென்ற முதல் இலங்கை தமிழ் மருத்துவரும் அமெரிக்க விமானப் படையில் நீண்டகாலம் மருத்துவராக கடமையாற்றியவரும் யாழ். இந்துக் கல்லூரியின் மைந்தனுமான வைத்திய கலாநிதி எஸ். சிவப்பிரகாசம் தனது 86 ஆவது வயதில் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார்.

அவரது தகனக்கிரியைகள் நேற்று கொழும்பில் இடம்பெற்றது. (ஞா - 18)

## காணாமல்...

கூற முன்னர் கணக்கெடுப்பு ஒன்றைச் செய்ய வேண்டும் என ஊடகத்துறை அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் போனோர் என கூறப்படுவோர் சிலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். எனவே, இது தொடர்பில் பரந்துபட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும்.போர் நிறைவுக்கு வந்து தற்போது 11 வருடங்கள் கடந்துவிட்டன. 7 வருடங்களின் பின்னர் சான்றிதழ் வழங்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஞா)


## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (3688)

077 340 5951
e-mail : engchelvam@gmail.com


## ஆலோசனைப்படி...

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்தார்.

வடமேல் மாகாண மஹாசங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டின் எதிர்கால திட்டங்களை மஹாசங்கத்தின் ஆலோசனை மற்றும் அறிவுரையின் பேரில் செயற்படுத்துவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெளிவாகக் கூறியுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார். (ஞா)

## விக்னேஸ்வரன்...

இலங்கையின் மூத்தமொழியென விக்னேஸ்வரன் அண்மையில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையின் சூடு இன்னும் தணியவில்லை.


கோட்டா அரசின் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர நேற்று அது பற்றி கருத்து தெரிவித்தார்.

பாராளுமன்ற சபாநாயகரை வரவேற்று விக்னேஸ்வரன் உரையாற்றிய போது இனவாதத்தையே பேசினார். அப்போது எழுந்து நின்று எதிர்ப்பு தெரிவிக்க முயன்றேன். எனினும், சபாநாயகரை வரவேற்று ஆற்றப்படும் உரைகளை எதிர்ப்பது பாராளுமன்ற பாரம்பரியங்களிற்கு எதிரானது என்பதால் என்னால் எதிர்க்க முடியவில்லை.

விக்னேஸ்வரனின் உரை இனவெறியானது. எதிர்காலத்திலும் பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றுவார் என நம்புகிறேன். அப்போது கவனித்துக் கொள்வோம்.

விக்னேஸ்வரனின் பேச்சை ஹன்சார்ட் புத்தகத்திலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஞா)

# மரண அறிவித்தல்



## செல்வராசா சிவலிங்கம்

( முன்னைநாள் உற்பத்தி முகாமையாளர் — யாழ். புடவை நெசவாளர் கூட்டுறவு சங்கம், உரிமையாளர் — S. லிங்கம் ரிம்பஸ் )

திருநெல்வேலி கிழக்கு முடமாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சிவலிங்கம் நேற்று (23.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வராசா - அன்னலட்சுமி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பூரணம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற இராசகுமாரியம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தனலிங்கம், மகாலிங்கம், மற்றும் ரதிமணிதேவி, ரஞ்சனாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுதாகரன், ஜனனி (மருந்தாளர் - யாழ். வைத்தியசாலை), செல்வகரன் (UK) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் தயாளினி (பிரதேச செயலகம் - உடுவில்), பிரதீபன் (வளிமண்டல ஆராய்ச்சி திணைக்களம் ), பொபிதா (UK) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஸத்விகா, சோபிதன், மகரிஷா, அக்சயன், லக்ஸ்மிரா ஆகியோரின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (24.08.2020) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செல்வராசா அவனியூ, அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

Tel : 077 757 0150

தகவல்:
குடும்பத்தினர்

(3671)

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு முழு ஆதரவு

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகும். அன்றையதினம் வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் யுத்த முடிவில் சரணடைந்த மற்றும் உறவினர்களால் கையளிக்கப்பட்ட பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நடத்தப்படும் கவனயீர்ப்புப் போராட்டம் , பேரணிகளுக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பூரண ஆதரவு தெரிவிக்கின்றது என அக்கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிக்கை வெளியிட்டுள்ளார்.**




அவ் அறிக்கையில், கடந்த 2015 செப்டெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தில் உள்ளக விசாரணையே வலியுறுத்தப்பட்டது. அதனால் ஒருபோதும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கப் போவதில்லை என்பதனையும், காணாமல்போனோருக்கான அலுவலகம் என்பது வெறும் கண்துடைப்பு நாடகம் என்பதனையும் பாதிக்கப்பட்ட உறவுகள் ஆரம்பத்திலிருந்தே சுட்டிக்காட்டி, உள்ளக விசாரணைப் பொறிமுறை மற்றும் காணாமல் போனோருக்கான அலுவலகம் என்பவற்றை அடியோடு நிராகரித்தனர். அத்துடன் வலி ந்து காணாமல் ஆக்கப்பட்டமை மற்றும் இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் தொடர்பாக முழுமையான சர்வதேச பக்கச் சார்பற்ற குற்றவியல் நீதி விசாரணை நடத்தப்படல் வேண்டுமென்ற கோரிக்கையானது கடந்த ஆறு வருடங்களாக பாதிக்கப்பட்ட மக்களால் வலியுறுத்தப்பட்டு வந்தது. எனினும் அவர்களது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டு உள்ளக விசாரணைக்கு சந்தர்ப்பம் வழுங்கப்பட்டது மட்டுமன்றி தொடர்ச்சியான கால நீடிப்புக்களும் வழங்கப்பட்டு வந்தன. அதன் காரணமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகளுக்கும் இன்று வரை நீதி கிடைக்கவில்லை.

இந்நிலையில் இலங்கையின் இறுதி யுத்தத்தில் இடம் பெற்ற போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள்,இனப்படுகொலைக் குற்றங்களுக்கு பொறுப்பாகவிருந்தவர்கள் இன்று நாட்டின் ஆட்சிப் பீடத்தில் ஏறியுள்ளனர். இந்நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கைக்கு வழுங்கப்பட்ட இரண்டு ஆண்டு கால நீடிப்பு 2021 மார்ச் வரை தொடர அனுமதிப்பது காலத்தைக் கடத்தும் நடவடிக்கை மட்டுமேயாகும்.

எனவே இலங்கைக்கு வழுங்கப்பட்டுள்ள கால நீடிப்பை உடனடியாக இரத்துச் செய்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி மற்றும் இனப்படுகொலைக்கான நீதி தொடர்பில் சர்வதேச பக்கச்சார்பற்ற குற்றவியல் விசாரணைக்கு பரிந்துரை செய்யப்படல் வேண்டுமென வலியுறுத்தி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவினர்களால் வடக்கு-கிழக்கில் நடத்தப்படவுள்ள மேற்படி போராட்டங்களுக்கு அனைத்து பொது அமைப்புக்க ளையும், பொதுமக்களையும் ஆதரவு வழங்குமாறு கோருகின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## மின்தடைக்கான காரணம் வெளியானது

(கொழும்பு)

மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் விநியோக அமைப்புகளின் பராமரிப்பு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட முறையான நடைமுறையை செயற்படுத்துவதில் தோல்வி மற்றும் கெரவலபிட்டிய துணை மின் நிலையத்திற்கும் நுரைச்சோலை துணை மின் நிலையத்திற்கும் இடையில் பாதுகாப்பு மண்டலங்கள் செயற்படாமை உள்ளிட்ட காரணிகளே நாடு முழுவதும் மின் விநியோகத் தடை ஏற்படக் கார ணமாகும் என்று இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் மேற்பார்வையார்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் கடந்த 17 ஆம் திகதி ஏற்பட்ட மின்சாரத்தடை தொடர்பாக ஆராய்வதற்காக மின்சாரத்துறை மற்றும் எரிசக்தி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவில் இலங்கை மின்சார சபையின் தொழில்நுட்ப பொறியியலாளர்கள் மற்றும் மேற்பார்வையார்களின் சங்கம் அதன் அறிக்கையை சமர்ப்பித்துள்ளது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

**மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் விநியோக அமைப்புகளின் பராமரிப்பு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட முறையான நடைமுறையை செயற்படுத்துவதில் தோல்வி.**

மின்சார கண்காணிப்பாளர்களைத் தவிர மற்ற அதிகாரிகளுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழில்நுட்ப பயிற்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் அறிவு மற்றும் அனுபவத்தைத் தவிர தொழில்நுட்ப கடமைகளில் உண்மையில் ஈடுபட்டுள்ள மின்சார கண் காணிப்பாளர்களுக்கு அத்தியாவசியத் தொழில்நுட்ப பயிற்சி வழுங்கப்படவில்லை.

மின்சார அமைப்பை பராமரிப்பதற்கு உகந்த சூழலை உருவாக்குவது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

இதனால் ஆப த்து முற்றிலுமாக அகற்றப்படும். பராமரிப்பை மிகுந்த பொறுப்புடனும் மேற்பார்வையுடனும் மேற்கொள்ள சரியான கண்காணிப்பு முறையுடன் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறை இன்னும் அறிமுகப்படுத்தப்படவில்லை. முறையான நடைமுறையை அறிமுகப்படுத்துவதில் தாமதம் ஏற்படுத்தப்பட்டால் திடீர் மின் தடை மற்றும் எதிர்காலத்தில் பாரிய விபத்துக்களுக்கு வழிவகுக்கும்.



**கெரவலபிட்டிய துணை மின் நிலையத்திற்கும் நுரைச்சோலை துணை மின் நிலையத்திற்கும் இடையில் பாதுகாப்பு மண்டலங்கள் செயற்படாமை**

கெரவலப்பிட்டியவிலிருந்து நுரைச்சோலை வரையிலான கொட்டுகொட, வேயங்கொட மற்றும் சிலாபத்தில் உள்ள கட்டம் துணை மின்நிலையத்தில் உள்ள பாதுகாப்பு அமைப்புகள் செயற்படவில்லை என்றால், அவை விரைவில் விசாரிக்கப்பட வேண்டும்.

இல்லையெனில், தவறான பாதுகாப்பு அமைப்புகளால் இன்னும் கடுமையான தனிப்பட்ட மற்றும் சொத்து சேதம் ஏற்படலாம்.

கெரவலபிட்டியவிற்கும் நுரைச்சோலைக்கும் இடையிலான பாதுகாப்பு மண்டலங்களின் செயற்பாடுகள் மற்றும் இந்த மின்தடை பாதுகாப்பு அமைப்புகள் பதிலளித்த விதம் குறித்து ஆராயப்பட வேண்டும். அந்த பாதுகாப்பு அமைப்புகள் முறையாக பராமரிக்கப்படாவிட்டால், அதற்கு காரணமான அதிகாரிகளும் இந்த மின் தடைக்கு முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

**கெரவலபிட்டி மற்றும் நுரைச்சோலை இரண்டிலும் நிலத்தடியில் பிரச்சினை**

கெரவலபிட்டிய துணை மின்நிலையத்தில் நிலத்தடி பிரச்சினை இருந்தால், இதன் விளைவால் நுரைச்சோலை மின்நிலையம் செயலிழக்காது என்பது தர்க்க ரீதியானது. அப்படியானால், இந்த இரண்டு இடங்களிலும் உள்ள பிழைகள் ஒன்றுக்கொன்று சுயாதீனமாக இருக்கும். அதன்படி, கெரவலபிட்டி துணை மின்நிலையத்தில் ஏற்பட்ட தவறு நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மின்னுற்பத்தியை பாதிக்கவில்லை என்று தெரியவருகிறது. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் பிரச்சினை அதன் தனிப்பட்ட தவறு என்று நாங்கள் சந்தேகிக்கிறோம். அதன்படி, மின் தடை ஏற்பட்ட பின்னர் நாடு முழுவதும் மின் தடை ஏற்பட்டதற்கு நுரைச்சோலை மின் உற்பத்தி நிலைய செயலிழப்பு தான் காரணம் என்று சந்தேகிக்க முடியும்.

இந்த அறிக்கையின் பிரதிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க, அமைச்சின் செயலாளர் , இலங்கை மின்சார சபையின் தலைவர், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் , இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அழிக்கப்பட்டது நான்கு ஏக்கர் கஞ்சா தோட்டம்



**(கொழும்பு)**

**விசேட அதிரடிப்படை மற்றும் விமானப்படை இணைந்து கடந்த 21 ஆம் திகதி ஹம்பேகமுவாவில் உள்ள குடா ஓயா மற்றும் தனமல்விலா பகுதிகளில் 4 ஏக்கருக்கு மேற்பட்ட கஞ்சா செடிகளை அழித்துள்ளன.**

இதுதொடர்பில்மேலும்தெரிய வருவதாவது, விசேட அதிரடிப்படைக்குக் கிடைத்த இரகசியத் தகவலை யடுத்து விமானப்படையின் உதவியுடன் ஹம்பேகமுவாவில் உள்ள குடா ஓயா மற்றும் தனமல்விலா பகுதிகளில் மேற்கொண்ட விமான ரோந்து நடவடிக்கைளின்போது அப்பகுதிகளில் 4 ஏக்கருக்கு மேற்பட்ட கஞ்சா தோட்டம் கண்டுபிடிக்கப்பட்டு முற்றிலுமாக அழிக்கப்பட்டதாக விசேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி டி.ஐ.ஜி. உருணா ஜெயசுந்தரா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இக்கஞ்சாத்தோட்டத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஜ-2)

## ஈரானுக்கு எதிராக பொருளாதாரத்தடை அமெரிக்காவின் பிரேரணை தோல்வி

(வோஷிங்டன்)

2015 ஆம் ஆண்டு ஆயுதத் தடை ஒப்பந்தத்தை ஈரான் மீறியுள்ளதால் அதன் மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்று அமெரிக்கா ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் கொண்டுவந்தச்வதேச பொருளாதாரத் தடை பிரேரணை பிரிட்டன், ஜேர்மனி, பெல்ஜியம் மற்றும் சீனா, ரஷ்யா போன்ற நாடுகளின் கடும் எதிர்ப்பால் தோல்வியுற்றது. 15 நாடுகள் கொண்ட பாதுகாப்புச் சபையில் 13 நாடுகள் எதிர்ப்பை வெளியிட்டன.

மேலும் தென்னாபிரிக்கா, இந்தோனேசியா, துனிசியா, எஸ்ரோனியா மற்றும் கிறினடிஸ் போன்ற நாடுகள் ஈரானுக்கு எதிரான பிரேரணைக்கு தமது எழுத்து மூல எதிர்ப்பை வெளியிட்டன.

அணுசக்தி ஒப்பந்தத்தை ஈரான் மீறி செயற்படுவதால் ஈரான் தடைக்கு அனுமதிக்க வில்லை என்றால் கடுமையான விளைவுகள் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்கா எச்சரித்ததோடு 2015 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தினால் தடையிலிருந்து விலக்களிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ளது. (ஜ)

## உக்காத பொருட்களுக்குத் தடை

(கொழும்பு)

நாட்டில் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் உக்காத பொருட்களுக்குத் தடை விதிக்க மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை அவதானம் செலுத்தியுள்ளது.

ஒருமுறை பயன்படுத்திவிட்டு வீசப்படும் உக்காத பொருட்கள் மற்றும் தயாரிப்புப்பக்கெட்களைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்படவுள்ளது.

அதற்கமைய பல்வேறு தயாரிப்புகள் உள்ளடக்கப்பட்ட சஷே பக்கெட்கள் மற்றும் குடிபானக் கொள்கலன்கள் போன்று சந்தைகளில் விற்பனையாகும் பொருட்களின் பட்டியல் தயாரித்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான யோசனை ஒன்று எதிர்வரும் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல வருடங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய சுற்றுச்சூழல் பாதிப்பதே இதன் நோக்கம் என அவர் கூறியுள்ளார்.

ஒரு முறை பயன்படுத்திவிட்டு வீசப்படும் உக்காத பொருட்களால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை அதிகாரி தெளிவுபடுத்தியுள்ளார். (ஜ)

## இந்தியா - பாகிஸ்தான் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த 5 பேர் சுட்டுக்கொலை



(பஞ்சாப்)

பஞ்சாபில் இந்தியா- பாகிஸ்தான் எல்லையைக் கடந்து அத்துமீறி நுழைந்த 5 பேரை, எல்லைப் பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு, அத்துமீறி நுழைய முற்பட்ட 5 பேரை, எல்லைப் பாதுகாப்புப் படையினர் இவ்வாறு சுட்டுக்கொன்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் கூறியுள்ளதாவது, "பஞ்சாபின் தரன் தாரன் மாவட்டத்துக்கு உட்பட்ட சர்வதேச எல்லைப் பகுதிக்குள் சிலர், நேற்று முன்தினம் நள்ளிரவு அத்துமீறி நுழைய முயன்றதை எல்லைப் பாதுகாப்புப் படையினர் கவனித்தனர்.

மேலும், அத்துமீறி நுழைய முயன்றவர்களை பாதுகாப்புப் படையினர், முதலில் எச்சரித்தனர். ஆனால், எல்லைப் பாதுகாப்பு வீரர்களை நோக்கி அவர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தத் தொடங்கினர்.

அதனைத் தொடர்ந்தே பாதுகாப்புப் படையினர் பதில் தாக்குதல் நடத்தினர். அதிகாலை 4.45 வரை நீடித்த சமரின் இறுதியில் இந்தியப் பகுதிக்குள் அத்துமீறி நுழைய முயன்ற 5 பேர், சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மேலும், அவர்களிடமிருந்து ஏ.கே-47 துப்பாக்கி, சிறிய ரக துப்பாக்கிகள், வெடி பொருட்கள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவத்தையடுத்து எல்லைப் பகுதி முழுவதும் வீரர்கள் கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளனர்" எனக் குறிப்பிட்டுள்ளனர்.

பாகிஸ்தானுடனான சர்வதேச எல்லைப் பகுதியில் அத்துமீறி நுழைய முற்பட்ட 5 பேர், ஒரே நாளில் சுட்டுக் கொல்லப்பட்டது கடந்த 10 ஆண்டுகளில் இதுவே முதல் முறையெனக் கூறப்படுகின்றது. (ஜ-2)

## ட்ரோனை பறக்கவிட்ட சீனப் பிரஜை கைது

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டி பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலய பகுதிக்குள் தொலைவில் இருந்து இயக்கும் ட்ரோன் கமராவைப் பறக்கவிட்ட சீனப் பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ அதிகாரிகள் இந்தச் சீனப் பிரஜையைக் கைது செய்து, மேலதிக விசாரணைகளுக்காக கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

உரிய பாதுகாப்பு அனுமதியைப் பெறாது ட்ரோன் போன்றவற்றை வானில் பறக்கவிடுவது சட்டத்திற்கு எதிரானதாகும்.

இதற்கு முன்னர் கண்டியில் ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தில் ட்ரோன் கமராவைப் பறக்கவிட்டுக் காட்சிகளைப் படமாக்கிய வெளிநாட்டுப் பிரஜையைக் கண்டி பொலிஸார் கைது செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

## இந்தியாவை அச்சுறுத்தும் கொரோனா பாதிப்பு 30 இலட்சத்தைக் கடந்தது

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 30 இலட்சத்தைக் கடந்துள்ளது. உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸின் தாக்கம் இந்தியாவில் சடுதியாக அதிகரித்துச் செல்கிறது.

இந்த வைரஸ் காரணமாக நேற்று முன்தினம் ஒரேநாளில் 70 ஆயிரத்து 68 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து இந்த வைரஸினால் பாதிக்கப்பட்டவர்கள் மொத்த எண்ணிக்கை 30 இலட்சத்து 43 ஆயிரத்து 436 ஆக பதிவாகியுள்ளது.

இதேநேரம் இந்த வைரஸ் காரணமாக நேற்று முன்தினம் ஒரேநாளில் 918 பேர் உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழப்புக்களின் மொத்த எண்ணிக்கை 56 ஆயிரத்து 846 ஆக பதிவாகியுள்ளது.

இதேநேரம் இந்த வைரஸினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலங்களாக தொடர்ந்தும் மகாராஷ்ரா மற்றும் தமிழ்நாடு, டில்லி ஆகியன உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

## சுற்றிவளைப்பில் 343 பேர் கைது

(கொழும்பு)

மேல்மாகாணத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது போதைப் பொருள் மற்றும் சட்டவிரோத மதுபானம் தயாரித்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் 343 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஹெரோயின் வைத்திருந்த 126 பேர் கைது செய்யப்பட்டுள்ள அதேவேளை 84 பேர் கஞ்சா போதைப்பொருட்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்ததாக மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் ஐஸ் ரக போதைப் பொருட்களுடன் கைதான 12 பேரும் குறித்த குழுவில் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# இராசிபலன்

24.08.2020
ஆவணி 08, திங்கட்கிழமை
சஷ்டி முன்னிரவு 7.25 மணிவரை
சுவாதி முன்னிரவு 8.38 மணிவரை
சுபநேரம் 12.05 - 1.35 மணிவரை
இராகுகாலம் 7.35 - 9.05 மணிவரை
சந்திராஷ்டமம்:- உத்தரட்டாதி, ரேவதி
சஷ்டி விரதம்

வளவன்


மேஷம்

சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


ரிஷபம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், உடல்நலம் சீராகும், கடன் சுமை குறையும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


மிதுனம்

பெருமைகள் வந்து சேர கந்தனை வழிபட வேண்டியநாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம்.


கடகம்

தூரதேசத்திலிருந்து சுபசெய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், விரதம் வழிபாட்டில் ஆர்வம் கூடும், பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு.


சிம்மம்

நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.


கன்னி

வழிபாட்டால் சிறப்புக்களைக் காண வேண்டிய நாள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வாக்கு மேன்மையுண்டு.


துலாம்

குடும்ப பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.


விருச்சிகம்

காரியங்களில் வெற்றிபெற கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர்களின் சந்திப்புண்டு, சுபகாரியச் செலவுகள் கூடும் நாள், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு.


தனுசு

பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.


மகரம்

பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், போசன நன்மையுண்டு, தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய முயற்சிகள் கைகூடும்.


மீனம்

உடல் நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாண பயமுண்டு, வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், கௌரவக்குறைவான சில சம்பவங்கள் இடம்பெறலாம்.

உனது பணிக்குத் தேவையானதை மட்டும் சேகரிக்க முற்படு.

# செப்டெம்பர் இறுதிக்குள் விமான நிலையத்தை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

செப்டெம்பர் இறுதிக்குள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மீண்டும் திறக்க எதிர்பார்த்துள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுகாதார அதிகாரிகளிடமிருந்துஒப்புதல்பெற்றபின்னரே இந்த முடிவு செயற்படுத்தப்படும். குடிமக்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கைக்கு வருகை தர ஏற்பாடு செய்யப்படும்கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களும் தற்காலிகமாக 2020 மார்ச் முதல் மூடப்பட்டன. இதன் விளைவாக இலங்கையில் சிக்கித் தவித்த அனைத்து சுற்றுலாப் பயணிகளையும் திருப்பி அனுப்ப அரசாங்கம் உதவியுடன், வெளிநாடுகளில் சிக்கித் தவிக்கும் அனைத்து இலங்கையர்களையும் திருப்பி அனுப்ப ஒரு சிறப்புத் திட்டத்தையும் ஆரம்பித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மோட்டார் வாகனப் போக்குவரத்துத்திணைக்களம் அரச ஊழியர்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பு

(கொழும்பு)

அரச மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்தும் அரச ஊழியர்கள் தங்களது பெயர்களிலேயே அதனை பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சுமித் அழகக்கோன் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 2015 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரச ஊழியர்கள் தங்களது பெயர்களில் மோட்டார் வாகனங்களை பதிவு செய்வதற்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த நிலையில் அரச மோட்டார் வாகனங்களை பயன்படுத்தும் அரச ஊழியர்கள் தங்கள் பெயர்களில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ)

# 376 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா அச்சம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 376 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அதற்கமைய அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், கென்யா மற்றும் கட்டார் ஆகிய நாடுகளில் இருந்து அவர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நாடு திரும்பினர்.

அதன்படி, அவுஸ்திரேலியாவிலிருந்து 239 இலங்கையர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானச் சேவைக்குச் சொந்தமான விமானத்தில் அதிகாலை 3.38 மணிக்கு மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

பயணிகளில் பெரும்பாலானோர் வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்விக்காக அவுஸ்திரேலியா சென்ற இலங்கையர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 35 இலங்கையர்கள் எமிரேட்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான விமானத்தில் நேற்று அதிகாலை 1.26 மணிக்கு டுபாயிலிருந்து கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதேநேரம், கென்யாவின் நைரோபியில் இருந்து 83 இலங்கையர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானச் சேவைக்குச் சொந்தமான விமானத்தில் நேற்று அதிகாலை 1.18 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

அதேபோன்று, கட்டாரில் இருந்து 19 இலங்கையர்கள் கட்டார் ஏயார்வேஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தின் மூலம் அதிகாலை 1.30 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ)

# மரண அறிவித்தல்

## அமரர்.திருமதி.மாவடிக்கந்தசாமி கௌரியம்மா



அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் (அறுகம்பற்று) கொண்ட காலஞ்சென்ற மாவடிக்கந்தசாமி அவர்களின் அன்பு மனைவி கௌரியம்மா 22.08.2020 விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களில் கலந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் வசந்த குமார், வசந்தசீலன், வசந்தகுதன், வசந்தரூபன், ரதி, கனி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவராகினி, நிர்மலா, ஜெயகலா, பவானி, அம்பிகைபாகன், திருவருட்செல்வம், ஆகியோரின் அன்பு மாமியாரும் ரூபினி, ஜனாகரன், பிரவின், வர்ஷா, வினயா, கோகுலன், ராகுலன், அபிகுலன், கௌசிகன், கேசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 24.08.2020 இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் அளவெட்டி தெற்கு கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

(3664)

# போதையை ஒழிக்க களத்தில் இறங்கிய இளைஞர்கள்; வட்டக்கச்சி நகரை சுத்தம் செய்ய சத்தியம்





## ஏனைய பிரதேச இளைஞரை அணிதிரள அழைப்பு

(முறிகண்டி)

**சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு எதிராக களத்தில் குதித்த வட்டக்கச்சி இளைஞர்கள் - போதைப்பொருள் பாவனையற்ற மாவட்டமாக கிளிநொச்சியை உருவாக்க ஏனைய பிரதேச இளைஞர்களிற்கும் அழைப்பு.**

சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு எதிராக வட்டக்கச்சி இளைஞர்கள் களத்தில் குதித்துள்ளனர். 100க்கு மேற்பட்ட இளைஞர்கள் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையினை கட்டுப்படுத்துவதற்கும், எதிர்கால சமுதாயத்தை வளமாக்கும் நோக்குடனும் போதைப்பொருளற்ற பிரதேசமாக அடையாளப்படுத்தும் தூர நோக்கு சிந்தனையுடன் களமிறங்கியுள்ளனர்.

நேற்றுக்காலை கிளிநொச்சி வட்டக்கச்சி 10 வீட்டுத்திட்டம் பகுதியில் குறித்த இளைஞர்களால் பெருமளவு கசிப்பு உற்பத்தி அழித்தொழிக்கப்பட்டது. குறித்த இளைஞர்களின் செயற்பாட்டை பிரதேச மக்கள் பாராட்டி வருகின்றனர்.

அண்மைய நாட்களாக வட்டக்கச்சி பிரதேசத்தை சேர்ந்த 100க்கு மேற்பட்ட இளைஞர்கள் இவ்வாறு போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கையில் சுயமாக களமிறங்கியுள்ளனர். பொலிஸார், இராணுவ புலனாய்வு பிரிவு, விமானப் படையினரின் ஆதரவுடன் போதைப் பொருளற்ற வட்டக்கச்சிஎனும் தொனிப் பொருளில் குறித்த சமூக வேலைத் திட்டத்தில் களமிறங்கியுள்ளமை பிரதேசத்தில் வரவேற்பை பெற்றுள்ளது.

குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் மது உற்பத்தி செய்யப்படும் பகுதிகளை முற்றுகையிட்டு பொலிஸாரிடம் பாரமளித்தல், விற்பனை செய்யப்படும் பகுதிகளிற்கு கொள்வனவிற்காக வரும் மக்களை தடுத்தல் உள்ளிட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறுகிய கால வேலைத்திட்டத்தில் கணிசமான அளவு சட்டவிரோத கசிப்பு விற்பனை தடுக்கப்பட்டுள்ளதாக குறித்த சமூக பணியில் ஈடுபட்டுவரும் இளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வேலைத்திட்டத்தின் ஒன்றான கசிப்பு உற்பத்தியினை தடுக்கும் வகையில் இளைஞர்கள் சுற்றி வளைப்பொன்றை மேற்கொண்டு 420 லீற்றர் கோடா மற்றும் 10 லீற்றர் கசிப்பு ஆகியன மீட்கப்பட்டு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டன.

போதைப்பொருளற்ற வட்டக்கச்சி மண்ணை உருவாக்கும் செயற்றிட்டத்தில் ஈடுபட்டுவரும் இளைஞர்களிற்கு பிரதேசத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தம்மைப்போன்று ஏனைய பிரதேசங்களில் உள்ள இளைஞர்கள் குறைந்தது 10 பேராவது களத்தில் இறங்கினால் போதைப்பொருளற்ற மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தை உருவாக்க முடியும் என அந்த இளைஞர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை தமது செயற்பாட்டிற்கு தொடர்ந்தும் பொலிஸாரும், முப்படையினரும், அரச அதிகாரிகளும், பொது மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் அவர்கள் முன்வைத்துள்ளனர். (5-100)

## வசமாகச் சிக்கிய சங்கிலித் திருடன்

(கொடிகாமம்)

வரணி, கொடிகாமம்,விடத்தற்பளை ஆகிய இடங்களில் இடம்பெற்ற சங்கிலி அறுப்புடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கொடிகாமம் நகரப் பகுதியில் கைது செய்யப்பட்டார்.

கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலினடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-114)

## தனிமைப்படுத்தலிலிருந்து மேலும் 161 பேர் வீடுகளுக்கு

(கொழும்பு)

தனிமைப்படுத்தலை நிறைவு செய்த மேலும் 161 பேர் நேற்றைய தினம் தமது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, நாட்டில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்த மேலும் 161 பேர் தத்தமது வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கொவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் நாட்டில் இதுவரை 31 ஆயிரத்து 173 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் தற்போது முப்படையினரின் கீழ் இயங்கி வருகின்ற 52 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் 7 ஆயிரத்து 304 பேர் தொடர்ந்தும் தனிமைப்படுத்தலிற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் கொவிட் - 19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.(ஐ)

## வரதராஜப் பெருமாளுக்கு இன்று கொடி

(குப்பிழான்)

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா இன்று 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறும்.

இம் மஹோற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் 10 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் திருவடிநிலை தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மஹோற்சவ கால நேரங்கள் மாற்றப்படுமெனவும் ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (5-18)



**வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் "திருக்கரம்" ஆக்க இலக்கிய மலர் வெளியீடு கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமாகிய ஈ.தயாரூபன் தலைமையில் இடம்பெற்றது. (படம்:- கரணவாய் செய்தியாளர்)**

## கம்பியால் தாக்கப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -மீசாலைப் பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் இரும்புக் கம்பித் தாக்குதலுக்கு இலக்கான 52வயது பெண் ஒருவர் தொடர்ந்து ஆறு மாத காலமாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரை சாவகச்சேரி பொலிஸார் சனிக்கிழமை கைது செய்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி மாதம் மீசாலை பகுதியில் வாகனம் ஒன்றினை இரும்புக் கம்பியால் தாக்கும் போது அதனை மறிக்க குறுக்கே சென்ற பெண் ஒருவருக்கு தலையில் படுகாயம் ஏற்பட்ட நிலையில் தொடர்ந்து ஆறு மாத காலமாக அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

மீசாலைப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் குறித்த பெண்ணுக்கு காயம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் ஏற்கனவே 14 நாட்கள் சிறைத்தண்டனை அனுபவித்த நிலையில் தற்போது மீண்டும் கைதாகி உள்ளார். கைதான சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்தவிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-30)

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் 30ஆவது நினைவு நாள் அனுஷ்டிப்பு



(மட்டக்களப்பு)
சித்தாண்டி பிரதேசத்தில் 1990ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தின் சுற்றிவளைப் பின் போது கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுக ளின் 30ஆவது ஆண்டு ஞாப கார்த்த நிகழ்வு நேற்று சித்தா ண்டி முருகன் ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் முருகன் ஆலயத்தில் வழிபாட் டுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மௌன அஞ்சலியுடன், வாயில் கறுப்புத்துணி கட்டி உறவுகள் தங்கள் ஆதங்கத்தினையும், காணாமல் ஆக்கப்பட்ட உறவு கள் தொடர்பான எதிர்பார்ப் பினையும் வெளிப்படுத்தியிருந் தனர்.

1990ஆம் ஆண்டு இடம் பெற்ற அசாதாரண சூழ்நிலை யால் சித்தாண்டி, கிரான், சந்தி வெளி, மாவடிவேம்பு, முறக் கொட்டான்சேனை பிரதேசங்க ளின் மக்கள் சித்தாண்டி சித் திரவேலாயுத சுவாமி ஆலயத் தில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட் டிருந்த போது ஆவணி 15, 18, 22ஆம் திகதிகளில் இலங்கை இராணுவத்தினரால் மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக ளில் கைது செய்யப்பட்டு பின் காணாமல் ஆக்கப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# உலகை உலுக்கும் கொரோனா; 2 கோடியே 33 இலட்சம் பேர் பாதிப்பு



(ஜெனீவா)
உலகம் முழுவதும் கொரோனா பரவியவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 33 லட்சத்தை கடந்தது.

சீனாவில் ஹூபேய் மாகா ணம் வுகான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த வைரஸ் தற்போது உலகின் 213 நாடுகளுக்குப் பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இந்த வைரஸிற்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கும் பணி யின் இறுதிக் கட்டத்தை விஞ் ஞானிகள் எட்டியுள்ளனர். ஆனாலும் கொரோனாவின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரி த்துக்கொண்டே செல்கிறது.

இந்நிலையில், உலகம் முழு வதும் கொரோனா வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 2 கோடியே 33 லட்சத்து 59 ஆயிரமாக அதிகரித்துள்ளது.

வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டவர்களில் 66 இலட்சத்து 62 ஆயிரத்து 226 பேர் சிகிச்சை பெற்று வரு கின்றனர்.

சிகிச்சை பெறுபவர்களில் 61 ஆயிரத்து 798 பேரின் நிலைமை கவலைக் கிடமாக உள்ளது.

வைரஸ் பாதிப்பில் இருந்து ஒருகோடியே 55 லட்சத்துக்கும் அதிகமானோர் குணமடைந் துள்ளனர். ஆனாலும், கொரோ னாவால் இதுவரை 8 லட்சத்து 5 ஆயிரம் பேர் உயிரிழந்துள் ளனர். (ஐ-2)

# போதைப்பொருள் உடைமையில் வைத்திருந்தவர்கள் கைது

(கொழும்பு)
நாட்டின் வெவ்வேறு பகுதி களில் நேற்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது ஹெரோயின் போதைப்பொ ருள், வாள்கள் மற்றும் போலித் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்க ளுடன் 7 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகப் பொலி ஸார் தெரிவித்தனர்.

தலங்கம பொலிஸ் பிரிவிற் குட்பட்ட சுஹ்திப்புர - பத்தர முல்லை பகுதியில் ஹெரோ யின் போதைப்பொருள், வாள் கள், இரும்புகள் மற்றும் போலி துப்பாக்கி உள்ளிட்ட பொருட்க ளோடு கடந்த சனிக்கிழமை சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார். பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவ டிக்கைகளின் போதே சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 4 கிராம்300 மில்லிகிராம்ஹெரோ யின் போதைப்பொருள் மீட்கப் பட்டுள்ளன. அதைத் தொடர் ந்து குறித்த சந்தேக நபரின் வீட்டைச்சோதனையிட்ட போது 3 வாள்கள், 2 இரும்பு பொல் லுகள் மற்றும் போலி கைத் துப்பாக்கி ஆகியன கைப்பற் றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட் டனர்.

களுத்துறை - எலமோதர பாலத்திற்கு அருகில் கடந்த சனிக்கிழமை குற்றத்தடுப்புப் பிரிவினர் முன்னெடுத்த தேடு தல் நடவடிக்கைகளின் போது ஹெரோயினுடன் இருவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆட்டோ ஒன்றில் ஹெரோ யின் போதைப்பொருளை கடத்த முற்பட்ட போதே சந்தேக நபர்களை குற்றத் தடுப்புப் பிரிவினர் மடக்கிப் பிடித்துள் ளனர். சந்தேக நபர்களிடமிரு ந்து 10 கிராம் 710 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரி வித்தது.

ஹொரண - தொலகொட பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 41 வயதான நபர்களே இவ் வாறு கைது செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. மேல திக விசாரணைகளை பொலி ஸார் முன்னெடுத்து வருகின்ற னர்.

பேலியகொடை - துட்டகை முனு மாவத்தையில் 48 கிராம் 29 மில்லிகிராம் ஹெரோ யினுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குற் றத்தடுப்புப் பிரிவினர் கடந்த சனிக்கிழமை முற்பகல் மேற் கொண்ட சோதனை நடவடிக் கைகளின் போதே குறித்த சந்தேகநபர் கைது செய்யப் பட்டுள்ளார்.

பேலியகொடை - துட்டகை முனு மாவத்தை பகுதியைச் சேர்ந்த 48 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

கல்கிஸ்ஸ - இரத்மலானை பகுதியில் கல்கிஸ்ஸ குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 11 கிராமிற்கும் அதிகளவு ஹெரோ யினுடன் இருவர் கைது செய் யப்பட்டதாகப் பொலிஸார் தெரி வித்தனர்.

குறித்த பகுதியில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் முன் னெடுக்கப்பட்ட சுற்றிவளைப் பின் போது சந்தேகத்திற்கிட மான கப்ரக வாகனமொன்று சோதனைக்கு உட் படுத்தப்பட் டது. இதன் போதே குறித்த வாகனத்தில் மறைத்து வைக் கப்பட்டிருந்த 11 கிராம் 699 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்ட தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 24 மற்றும் 33 வயது மதிக்கத்தக்க நபர்களே இவ் வாறு கைது செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. மேல திக விசாரணைகளை பொலி ஸார்முன்னெடுத்து வருகின்றனர்.

கிராண்ட்பாஸ் - மாதம்பிட் டிய பகுதியில் 5 கிராம் 220 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். குற்றத்தடுப்புப் பிரிவினர் சனிக்கிழமை இரவு மேற்கொண்ட தேடுதல் நடவ டிக்கைகளின் போதே குறித்த சந்தேகநபர் கைது செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார். (ஐ-2)

# ஐக்கிய மக்கள் சக்தியுடனான அரசியல் தொடர்புகளை நிறுத்திக்கொண்ட மங்கள



(கொழும்பு)
முன்னாள் அமைச்சர் மங் கள சமரவீர, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியுடன் இருந்த அரசி யல் தொடர்புகளை முற்றாக இடைநிறுத்திக் கொண்டுள்ளார்.

அவர், ஐக்கிய தேசியக் கட்சி யின் அடுத்த தலைமையுடன் இணைந்து செயற்பட தயாராகி வருவதாக தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை பெற்றுக்கொள்ளுமாறு மங்கள சமரவீரவுக்கு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளதுடன் அவரது தரப் பில் இருந்து அந்த அழைப்பு க்கு இதுவரை பதிலளிக்கப்பட வில்லை.

முன்னாள் அமைச்சர் மங் கள சமரவீர, ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைமைத்து வத்திற்கு வேறு ஒருவரை கொண்டு வரும் நடவடிக்கை களில் சில தலையீடுகளை மேற் கொண்டு வருவதாகவும் தகவ ல்கள் தெரிவித்துள்ளன. (ஐ)


**பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை**

**ஏலவிற்பனை**

**லொறி இல 27/2092**

**ஏல விற்பனை:-** பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைக் காரியாலயம்.

**திகதி:- 05.09.2020**
**நேரம்:- 10.00 மணி காலை**
**மீளளிக்கப்படாத கேள்விக்கான தொகை :- 1000.00**
**கேள்விகளின் இழிவுப் பெறுமதி :- 400000.00**

ஏல விற்பனை லொறி கொள்வனவு செய்பவர்கள் அன்றைய தினம் முழுமையாக பணத்தை செலுத்தி கொள்ள வேண்டும்.

லொறியினை காரியாலய நேரத்தில் (8.00-5.00) பார்வையி டலாம். மேலதிக விபரங்களை தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

**தலைவர்,**
**பருத்தித்துறை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்.**

# வடக்கில் ஆசிரியர் பற்றாக்குறை இல்லை எனினும் கல்வியில் முன்னேற்றமில்லை

## வடக்கு ஆளுநர் கவலை



(முல்லைத்தீவு)

தேசிய ரீதியில் 24 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருக்கும் போது வட மாகாணத்தில் 12 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற ஆசிரியர்களின் வளப்பகிர்வு இருக்கின்றது. இருந்தபோதும் மாணவர்களின் பெறுபேறுகளில் காணப்படும் பின்னடைவு தேசிய ரீதியில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது என வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ். எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், அண்மையில் உள்ள பாட சாலை சிறந்த பாடசாலை என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்ப்பட்ட நான்கு பாடசாலைகளில் அமைக்கப்பெற்ற கட்டடங்களை திறந்து வைத்தார். முள்ளியளை வித்தியானந்தா கல்லூரியில் அமைக்கப்பட்ட கலைக்கூட கட்டடத் தொகுதியை திறந்து வைத்த ஆளுநர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி சம்பந்தமான பாரிய சவால்களுக்கு வடமாகாணம் முகம் கொடுத்து வருகின்றது. கல்வி சார்ந்த சமூகத்துடன் நாங்கள் பேசிக் கொண்டிருக்கின்றோம்.

பல்வேறு தரப்பினர் குற்றச்சாட்டுக்களை சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஒப்பீட்டளவில் இலங்கையில் எந்த மாகாணத்தினை பார்த்தாலும், வட மாகாணத்தில் இருக்கின்ற பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை விட குறைந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் தான் ஏனைய மாவட்டங்களில் இருக்கின்றன. தேசியரீதியில் 24 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருக்கும் போது வடமாகாணத்தில் 12 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று ஆசிரியர்களின் வளப்பகிர்வு இருக்கின்றது. மாணவர்களின் பெறுபேறுகளில் காணப்படும் பின்னடைவு தேசியரீதியில் பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. இந்த விடயம் எங்களை உள ரீதியாக பாதிக்கின்ற விடயமாக காணப்படுகின்றது. இதனை வடமாகாணத்தில் வாழ்கின்ற அனைவரும் மிகவும் ஆழமாகச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். பல்வேறு தேவையற்ற கருத்துக்களையும் சிந்தனைகளையும் வளர்த்து வருகின்ற சமூக சிந்தனையாளர்கள் கல்வியில் ஏற்படுகின்ற தேக்க நிலை சம்பந்தமான கருத்தியல்களை சமூகத்தில் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இப்போது ஜனாதிபதி போதைவஸ்து சம்பந்தமாக எடுத்து வரும் நடவடிக்கையினால் யாரும் நினைத்து பார்க்க முடியாத இடங்களில் நினைத்த பார்க்க முடியாத மனிதர்கள் எத்தகைய செயல்களில் ஈடுபட்டுள்ளார்கள் என்பது வெளிப்படுவதை பார்க்கும்போது அதிர்ச்சியாக இருக்கின்றது. இந்த நாட்டில் சட்டமும் ஒழுங்கும் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி அக்கறையாக இருக்கின்றார்.

இதுவிடயம் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாருக்கு அவசரமான கடிதத்தினை நான் எழுதியுள்ளேன். வட மாகாணத்தில் சட்ட விரோதமான நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும். சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டும். மாணவர்கள் சுதந்திரமாக தங்கள் கல்வியினை பெற உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும் என்று அவர் எனக்கு பதிலளித்துள்ளார் எனத் தெரிவித்தார். (5-316)

# சட்டவிரோத மணல் கடத்தல் முறியடிப்பு

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை, கல்லாறு, உழவனூர் பகுதிகளில் சட்டவிரோதமணல் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு டிப்பர்களுடன் அதன் சாரதிகள் கைது செய்யப்பட்டனர். பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிபடையினர் இணைந்து மணல் கடத்தலை முறியடித்ததுடன் தருமபுரம் பகுதியில் 15 கிராம் கஞ்சா உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார். இவை தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதுடன் சந்தேக நபர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (5-316)

# பளைப் பகுதியில் ஆர்.பீ.ஜீ.குண்டு மீட்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோவில்வயல் பகுதியில் வெடிக்காத ஆர். பீ.ஜீ. குண்டு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் தனியாருக்கு சொந்தமான காணியில் பொதுமகன் ஒருவர் நேற்று முன்தினம் துப்புரவு பணியில் ஈடுபட்ட போது குறித்த குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து பளை பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் நீதிமன்ற அனுமதியையும் பெற்று குறித்த வெடிபொருள் செயலிழக்க செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (5-100)



# கிணற்றில் வீழ்ந்த காட்டு யானை



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவில் நேற்று அதிகாலை 2 மணியளவில் ஊருக்குள் நுழைந்த யானை ஒன்று கிராமவாசி ஒருவருடைய கிணற்றில் விழுந்துள்ளது.

தொடர்ச்சியாக ஊருக்குள் நடமாடித் திரியும் யானைகள் நேற்றும் ஊருக்குள் நடமாடி திரிந்த சமயம் கிராமவாசி ஒருவரின் கிணற்றில் தவறி விழுந்துள்ளது. கிணற்றில் விழுந்த யானையை வெளியேற்றுவதற்காக வனஜீவ ராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு மக்களால் தகவல் வழங்கப்பட்டது. அதையடுத்து யானையை அவர்கள் மீட்டு வனப்பகுதிக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தனர். குறித்த கிராமத்தில் தொடர்ச்சியாக யானைகளின் அச்சுறுத்தல் இருந்து வருகிறது. குறிப்பாக கடந்த சில நாட்களாக குறித்த பகுதியில் காணப்படும் தரம் 5 உட்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் பனிக்கன்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வளாகத்திற்குள் யானைகள் நடமாடி திரிவதனால் மாணவர்கள் பாடசாலைக்கு சொல்ல அச்சம் தெரிவித்து வருகின்றனர். (5-281)

# கிழக்கு- மேற்கு என இருபிரிவுகளாக பிரிகிறது நீர்ப்பாசன பொறியியலாளர்கள் அலுவலகம்




(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒன்பது பாரிய நடுத்தரக் குளங்கள் இதுவரை காலமும் ஒரு நீர்ப்பாசன பொறியியலாளரின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்தது. இதனால் ஏற்பட்ட பல்வேறு கஷ்டங்களையும், சிரமங்களையும் விவசாய அமைப்புக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிற்கு எடுத்துக்காட்டியதன் விளைவாக தற்போது கிளிநொச்சி கிழக்கு பிரிவு இரணைமடுக் குளம், கனகாம்பிகை, கல்மடு, பிரமந்தனாறு ஆகிய குளங்களை உள்ளடக்கியும் கிளிநொச்சி மேற்கு பிரிவாக அக்கராயன், வன்னேரி, பல்லவராயன்கட்டு, குடமுருட்டி, முறிப்பு ஆகிய குளங்களை உள்ளடக்கியதாகவும் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன பொறியலாளர் அலுவலகத்தினை வட மாகாண ஆளுநர் கடந்த வெள்ளிக் கிழமை திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், வட மாகாண பிரதம செயலாளர், நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-316)

# விகிதாசார பிரதிநிதித்துவ முறையை ரத்து செய்ய வேண்டும்-தேசியக் கூட்டு அமைப்பு

(கொழும்பு)

**மாகாண சபை முறையையும் தற்போதுள்ள விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையையும் நீக்குமாறும் தேசிய கூட்டு அமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

பல திருத்தங்கள் மூலம் அரசியலமைப்பில் அறிமுகப்படுத்தப்பட்ட ஏராளமான ஏற்பாடுகளை நீக்குவதற்கான உறுதிமொழியை அரசாங்கம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்திய குறித்த அமைப்பு, 'மாகாண சபைகள் ஒழிக்கப்படாது' என்று நீதி அமைச்சர் அலி சப்ரி வெளியிட்ட கருத்து குறித்து கவலை வெளியிட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அந்த அமைப்பின் இணைத் தலைவர்களான ஓய்வுபெற்ற லெப்டினன்ட் கேணல் அனில் அமரசேகர மற்றும் முன்னாள் பொலிஸ் அதிகாரி கே.எம்.பி. கொட்டகதெனிய, "மூன்று ஆண்டுகளாக இந்த மாகாண சபைகள் இல்லாமல் இருக்கிறோம். மாகாண சபைகள் இந்த நாட்டால் வாங்க முடியாத வெள்ளை யானைகள் போன்ற ஒன்றாகும்.

13 ஆவது திருத்தம் மாகாணங்களை ஒன்றிணைப்பதன் மூலம் இனக் குழுக்களை உருவாக்குவதற்கு வழங்குகிறது" எனத் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளமையினால் மாகாண சபை முறையை ரத்து செய்ய முடியும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன் தற்போதுள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறையை நீக்கிவிட்டு, 1978 க்கு முன்னர் இருந்ததைப் போன்ற தேர்தல் முறைக்கு திரும்ப வேண்டும் என்றும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

ஒரு புதிய அரசியலமைப்பு ஏற்பாடாக நாட்டின் அரசியலமைப்பு கட்டமைப்பை உடனடியாக மறுசீரமைக்க இந்த அரசாங்கத்தின் அனைத்து வளங்களையும் பயன்படுத்த வேண்டும் என்றும் இதுவே இந்த அரசாங்கத்தை பதவிக்கு அமர்த்த வாக்களித்த அனைத்து மக்களின் விருப்பம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்கூறிய திருத்தங்களால் ஏற்பட்ட வரலாற்று அநீதிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்துள்ளதாகவும், எனவே ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டால் புதிய அரசியலமைப்பு ஏற்பாட்டைத் தயாரிப்பதில் அரசாங்கத்திற்கு உதவக்கூடிய நிலையில் இருப்பதாகவும் தேசிய கூட்டு அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (ஜ)

# தேயிலை சாயம் எனும் தொனிப்பொருளில் புகைப்பட கண்காட்சி

(கண்டி)

மலையக மண்வாசனை சொல்லும் மலையக இளைஞர், யுவதிகளின் புகைப்பட கண்காட்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை தலவாக்கலை ஸ்ரீகதிரேசன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது.



தேயிலை சாயம் எனும் தொனிப் பொருளிலான இக்கண்காட்சியை காலை 8.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை பொது மக்கள் பார்வையிட்டனர்.

மலையகத் தமிழர்களின் கலை, கலாசார மற்றும் பண்பாட்டு விழுமியங்களையும் வாழ்வியலையும் பிரதிபலிக்கும் வகையிலான புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மக்களின் வலி சுமந்த வாழ்க்கையை எடுத்தியம்பும் காட்சிகளும் உள்ளன. (ஜ)



# புலனாய்வு எச்சரிக்கையை மைத்திரிக்கு தெரியப்படுத்த முடியவில்லை-நிலாந்த சாட்சியம்



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த புலனாய்வுத் தகவல்கள் கிடைத்த போதும், அதனை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு தம்மால் தெரியப்படுத்த முடிவில்லை என்று, அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலாந்த ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.


உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்று முன்தினம் சாட்சியம் அளித்த போதே, நிலாந்த ஜயவர்த்தன, இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனிப்பட்ட பயணமாக வெளிநாடு சென்றிருந்ததால், குண்டுத் தாக்குதல்கள் குறித்து எச்சரிக்கும் புலனாய்வுத் தகவல்களை அவரிடம் தெரிவிக்க முடியவில்லை என்று குறிப்பிட்டார்.

தாக்குதல் நடப்பதற்கு முதல் நாளும், தாக்குதல் நடப்பதற்கு சில நிமிடங்கள் முன்னதாகவும், மைத்திரிபால சிறிசேனவுடன் இரண்டு தடவைகள் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள தாம் முயன்றதாகவும், ஆனால் அவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும் நிலாந்த ஜயவர்த்தன சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் தாக்குதல் நடப்பதற்கு முன்னர், கடைசியாக பெப்ரவரி மாதமே தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டம் கூட்டப்பட்டது என்றும், அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ)

# ரபேல் விமானங்களை லடாக் எல்லையில் நிறுத்தும் இந்தியா



(டில்லி)

ரபேல் விமானங்களை லடாக் எல்லையில் நிறுத்துவது குறித்து இந்தியா திட்டமிட்டுள்ளது.

இந்திய-சீன இராணுவ வீரர்கள் இடையே மோதல் ஏற்பட்ட லடாக் எல்லையில் ரபேல் விமானங்களை நிறுத்துவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைத் தலைவர் பிபின் ராவத், முப்படைத் தளபதிகள் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உள்ளிட்டோருடன் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆலோசனைக் கூட்டமொன்றை நடத்தினார்.

குறித்த ஆலோசனைக் கூட்டத்திலேயே ரபேல் விமானங்களை லடாக் எல்லையில் நிறுத்துவது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.


கடந்த மாதம் 6ஆம் திகதி முதல் அங்கு படை விலக்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. இதில் கல்வான் பள்ளத்தாக்கு உள்ளிட்ட சில பகுதிகளில் இருந்து மட்டுமே சீனா தனது படைகளை திரும்ப பெற்றது.

ஆனால் பாங்கோங்சோ, தேப்சாங் உள்ளிட்ட பகுதிகளில் இன்னும் சீன படைகள் நிறுத்தப்பட்டு உள்ளன. இது இந்தியாவுக்கு அதிருப்தியை கொடுத்து உள்ளது.

எனவே அங்கு படை விலக்கும் நடவடிக்கைகளை விரைவில் முடித்து, கடந்த ஏப்ரல் மாதம் வரை நிலவிய சூழலை எல்லை முழுவதும் திரும்ப கொண்டு வர வேண்டும் என இந்தியா வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையிலேயே லடாக் எல்லை நிலவரம் குறித்து ராஜ்நாத் சிங், ஆய்வு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# ஸ்டெர்லைட்டுக்குத் தடை! மக்களின் மகிழ்ச்சி நீடிக்குமா?



'ஸ்டெர்லைட் ஆலையைத் திறப்பதற்கு அனுமதி இல்லை. தமிழக அரசின் உத்தரவே தொடரும்' என்று சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தூத்துக்குடி மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஆனாலும், ஆலைத் தரப்பு மேல்முறையீடு செய்யவிருப்பதால் மக்களின் இந்த மகிழ்ச்சி நீடிக்குமா என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2018, மே 22ஆம் திகதியன்று ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்களின் 100ஆவது நாள் போராட்டம் நடைபெற்றது. அப்போது பொலிஸ் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் அப்பாவி மக்கள் 13 பேர் உயிரிழந்தனர். மே 28 ஆம் திகதி ஆலையை மூடுவதற்கு தமிழக அரசு உத்தரவிட்டது. தொடர்ந்து ஆலைத்தரப்பில் பசுமை தீர்ப்பாயத்துக்கு இந்த வழக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஆலையைத் திறக்க உத்தரவிட்டது தீர்ப்பாயம். இதை எதிர்த்த தமிழக அரசின் மேல்முறையீட்டில் தீர்ப்பாயத்தின் தீர்ப்பை ரத்துசெய்த உச்ச நீதிமன்றம், 'இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றம்தான் விசாரிக்க வேண்டும்' என்றது. அதன்படி வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம் தற்போது ஆலையைத் திறப்பதற்கு அனுமதி மறுத்துள்ளது.

"இந்த வழக்கில் தமிழக அரசு வலுவான வாதங்களை முன்வைத்தது. ஆலைத்தரப்பில் மேல்முறையீட்டுக்குச் சென்றால் தமிழக அரசின் பக்கமிருக்கும் வலுவற்ற அம்சங்கள் எவை?" என்று மக்கள் கண்காணிப்பகத்தின் இயக்குநரும், மூத்த சட்டத்தரணியுமான ஹென்றி டிஃபேனிடம் கேட்டோம்.



"ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகத் தமிழக அரசு பிறப்பித்த அனைத்து ஆணைகளையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது உயர் நீதிமன்றம். ஆலைத்தரப்பு தாக்கல் செய்த பத்து மனுக்களையும் தள்ளுபடி செய்துள்ளது. இன்னொரு பக்கம் தமிழக அரசு முன்வைத்த வாதங்களை விட, ஆலையின் எதிர் மனுதாரர்களான ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ, பாத்திமா பாபு, சி.பி.எம்., மக்கள் அதிகாரம் ஆகியவற்றின் உறுப்பினர்கள் வைத்த வாதங்கள் வலுவாக இருந்தன.

அதேசமயம், கடந்த சில ஆண்டுகளாக ஸ்டெர்லைட் ஆலையால் ஏற்பட்ட புகை மாசு, நிலத்தடி நீர் பாதிப்பு, சுற்றுச்சூழல் சீர்கேடு இவற்றையெல்லாம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முறையாக ஆய்வுசெய்யவில்லை. மக்கள் 100 நாட்கள் போராடியும் அரசுத் தரப்பில் யாருமே பேச்சுவார்த்தை நடத்தவில்லை. ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில், 'துப்பாக்கிச் சூட்டால் அதிருப்தியிலுள்ள மக்களை திருப்திப்படுத்தவே ஆலையை அவசரமாக மூடினார்கள். துப்பாக்கிச்சூட்டுக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை' என்றும் ஆலைத்தரப்பில் வாதிட்டார்கள். இதை உயர் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

என்றாலும், மேல்முறையீட்டில் '100 நாட்களாக தமிழக அரசு ஏன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை?', 'மாசு கட்டுப்பாடு வாரியம் ஏன் முறையாக ஆய்வு செய்யவில்லை?' ஆகிய கேள்விகள் அரசுத் தரப்பை நோக்கிப் பாயலாம். இவையெல்லாம் இந்த வழக்கின் பலவீனமான அம்சங்கள். எனவே, குறைகளை தமிழக அரசு சரி செய்துகொள்ள வேண்டும்" என்றார் அழுத்தமாக.

இந்த வழக்கு விசாரணையின்போது ஸ்டெர்லைட் ஆலைக்காக வாதாடிய சட்டத்தரணி, 'போராட்டக்காரர்கள் ஆலை ஊழியர்களின் குடியிருப்பிலிருந்த வாகனங்களைச் சேதப்படுத்தினர். அதன் மதிப்பு 17 கோடி ரூபாய். அதன் பிறகே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டு, 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர்' என்ற வாதத்தை முன்வைத்தார். இது குறித்துப் பேசிய மக்கள் உரிமை பாதுகாப்பு மையத்தின் சட்டத்தரணி வாஞ்சிநாதன், "இந்தக் கருத்து மனிதத்தன்மையற்றது.

அதனால்தான் இதை நீதிபதிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. துப்பாக்கிச்சூடு நடந்த பிறகே ஆலை ஊழியர்களின் குடியிருப்பில் வாகனங்கள் எரிந்தன. ஆலைத்தரப்பேகூட இதைச் செய்திருக்கலாம். அப்படியே மக்கள் சேதப்படுத்தியிருந்தாலும், சொத்துகளைச் சேதப்படுத்தியவர்களைச் சுட்டுக் கொல்லலாம் என்று எந்தச் சட்டமும் சொல்லவில்லை" என்றார் ஆத்திரத்துடன்!

**ஹென்றி டிஃபேன், பாத்திமா பாபு, வாஞ்சிநாதன், பங்கஜ் குமார்**

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரிடம் பேசினோம். "நியாயமான தீர்ப்பு கிடைத்துள்ளது. காக்கைகளைப்போல் சுட்டு வீழ்த்தப்பட்ட எங்கள் உறவுகளின் இறப்புக்குக் கிடைத்த நீதி இது" என்றார்கள். ஸ்டெர்லைட் நிறுவனத்தின் சி.இ.ஓ-வான பங்கஜ் குமார், "இந்தத் தீர்ப்பால் ஆலையை நம்பியுள்ள ஒரு லட்சம் குடும்பத்தினர் ஏமாற்றமடைந்துள்ளனர். தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வோம்" என்றார்.

**நிரந்தர நீதிக்காகக் காத்திருக்கிறார்கள் மக்கள்.**

**ஜூனியர் விகடன்**

# சமூக,பொருளாதார தாக்கங்களை ஆராயும் ஒரு வழிமுறையாக அரச நிர்வாக பொறிமுறை மேம்படுத்தப்பட வேண்டும்

## பசில் வலியுறுத்து

(கொழும்பு)

**வேலைவாய்ப்பு உருவாக்கம், வருமானத்தை உயர்த்துதல், ஏற்றுமதி அதிகரிப்பு மற்றும் பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு, செயற்படுத்துகின்ற மற்றும் அதன் மூலம் கிடைக்கும் சமூக,பொருளாதார தாக்கங்களை ஆராயும் ஒரு வழிமுறையாக அரச நிர்வாக பொறிமுறையை மேம்படுத்த வேண்டும் என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



இலங்கை நிர்வாக சேவைகள் சங்கத்துக்கும் ஜனாதிபதி செயலணியின் தலைவருமான பசில் ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் அலரி மாளிகையில் நடைபெற்றது.

அதன்போது துல்லியமான தரவுகளையும் தகவல்களையும் ஒரே இடத்தில் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களின் பணத்தை செலவிட்டு தயாரிக்கப்படும் தேர்தல் வாக்காளர் பட்டியல்களை பொதுச் சொத்தாக மாற்றுவதன் முக்கியத்துவம் மற்றும் அதில் காணப்படும் சட்ட சிக்கல்கள் தொடர்பில் நிர்வாக சேவைகள் சங்கம் சுட்டிக்காட்டியது.

விவசாயம், மீன்பிடி, சுற்றுலா, ஏற்றுமதி மேம்பாடு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீடு, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விரைவாக நிலம் ஒதுக்கீடு உள்ளிட்ட பல துறைகளில் நிர்வாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதைய நிலையில் ஏற்றுமதித் துறையை மேம்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்ட ஐந்து பிரிவுகளின் ஊடாக அந்நிய முதலீட்டு வாய்ப்புகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், அதற்கு மாவட்ட மட்டத்தில் முதலீட்டாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் கட்டமைப்புகளின் அவசியம் குறித்தும் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

இந்த கலந்துரையாடலில் நிர்வாக சேவைகள் சங்கத்தின் தலைவர் பிரதீப் ரத்நாயக்க மற்றும் சங்கத்தின் அதிகாரிகள் குழுவினர் பங்கேற்றனர். (ஐ-2)

## மாணவன் வெட்டிக் கொலை

(கொழும்பு)

ஏறாவூரில் வாள்வெட்டுச் சம்பவத்தில் பாடசாலை மாணவன் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் செங்கலடி சந்தை வீதியைச் சேர்ந்த ரமணன் திவிராஜ் என்ற 15 வயது மாணவனே வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருகையில், சிறு வாய்த் தர்க்கமாக ஆரம்பித்த விடயம் கோஷ்டி மோதலாக மாறி பின் பழி தீர்க்கும் வகையில் வாள்வெட்டில் முடிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சடலம் உடற் கூறாய்வுப் பரிசோதனைக்காக ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இச் சம்பவத்தில் ஈடுபட்டோரைக் கைது செய்யும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ள ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ)

## குணமடைந்தோர் 2805

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியவர்கள் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 805 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மேலும் 7 பேர் குணமடைந்துள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 947 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அதில் 142 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

## விமானம் விழுந்து நொருங்கியது 17 பேர் பரிதாபமாக உயிரிழப்பு



(ஜுபா)

தெற்கு சூடானில் சரக்கு விமானம் விபத்துக்குள்ளானதில் விமானத்தில் பயணம் செய்த 17 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

வடஆபிரிக்க நாடான தெற்கு சூடானின் தலைநகர் ஜுபாவில் இருந்து அந்த நாட்டு விமானப்படைக்கு சொந்தமான சரக்கு விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது.

இந்த விமானத்தில் விமானி உட்பட 18 பேர் இருந்தனர். புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் திடீரென விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் விமான நிலையத்துக்கு அருகில் உள்ள குடியிருப்பு பகுதியையொட்டி விழுந்து நொருங்கியது.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 17 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். எனினும் ஒருவர் மட்டும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். படுகாயங்களுடன் மீட்கப்பட்ட அவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இதுகுறித்து தீவிர விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெற்கு சூடான் அரசு தெரிவித்துள்ளது. (ஐ-2)

## சாலிய பீரிஸ் பதவி விலகல்



(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான அலுவலக தலைவர் நிலையில் இருந்து சாலிய பீரிஸ் விலகியுள்ளார்.

சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்காகவே தாம் பதவி விலகியுள்ளதாக சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த பதவிவிலகல் செப்டெம்பர் 30இல் இருந்து நடைமுறைக்கு வருகின்ற நிலையில் பதவிவிலகலுக்கான கடிதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்துக்கு முதலாவது தலைவராக சாலிய பீரிஸ் நியமிக்கப்பட்டார்.

காணாமல் போனோர் தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொண்டு அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளும் வகையிலேயே இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கடந்த மார்ச்சில் அலுவலகத்தின் இரண்டாம் ஆண்டு பூர்த்தியின் போது வெளியிட்ட அறிக்கையில் காணாமல் போனோர் தொடர்பான உண்மைகளை கண்டறிந்து நீதியைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தினதும் அரச நிறுவனங்களினதும் ஒத்துழைப்பை அலுவலகம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாரதம்

## எதிர்பாராத தொகைக்கு ஏலம்போன
# மகாத்மா காந்தியின் மூக்குக் கண்ணாடி


(லண்டன்)

இங்கிலாந்து ஏல மையத்தில் அனைத்து சாதனைகளையும் முறியடிக்கும் வகையில் மகாத்மா காந்தியின் மூக்கு கண்ணாடி 2 லட்சத்து 60 ஆயிரம் பவுண்டுக்கு ஏலம் போய் உள்ளது.

மகாத்மா காந்தி வட்ட வடிவ மூக்கு கண்ணாடி அணிவது வழக்கம். அவரது, தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி ஒன்று இங்கிலாந்து நாட்டின் தென்மேற்கு பகுதியில் ஹான்ஹாம் என்ற இடத்தில் உள்ள ஈஸ்ட் பிரிஸ்டல் ஆக்சன்ஸ் ஏல மையத்தில் ஒன்லைன் மூலம் ஏலம் விடப்பட்டது.

இந்த கண்ணாடி 10 ஆயிரம் பவுண்டு முதல் 15 ஆயிரம் பவுண்டு வரை ஏலம் போகலாம் என்று அந்த நிறுவனம் எதிர்பார்த்தது. ஆனால் அனைத்து சாதனைகளையும் முறியடிக்கும் வகையில் அந்த மூக்கு கண்ணாடி 2 லட்சத்து 60 ஆயிரம் பவுண்டுக்கு ஏலம் போய் உள்ளது. அபூர்வமான இந்த மூக்கு கண்ணாடி நம்ப முடியாத விலைக்கு விற்பனையாகி இருப்பதாக அதை ஏலம் விட்ட ஈஸ்ட் பிரிஸ்டல் ஆக்சன்ஸ் ஏல மையத்தைச் சேர்ந்த ஆண்டி ஸ்டோவ் தெரிவித்தார். (2)





## உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம்
## பாகிஸ்தான்,சீனாவுக்கு இந்தியா கடும் எச்சரிக்கை



(டில்லி)

உள்நாட்டு விவகாரங்களில் தலையிட வேண்டாம் என்று சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இந்தியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் முகமது குரேஷி, பீஜிங் சீன வெளி விவகார அமைச்சர் யாங்-யீயுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.இதனையடுத்து காஷ்மீர் விவகாரம் தொடர்பாக சீனாவும் பாகிஸ்தானும் விடுத்த கூட்டறிக்கையில், இந்தியா ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை கண்டித்துள்ள மத்திய வெளி விவகார அமைச்சக செய்தித் தொடர்பாளர் அனுராக் ஸ்ரீவாத்சவா, ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும் பிரிக்க முடியாத பகுதி என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இந்த விவகாரத்தில் சீனாவும் பாகிஸ்தானும் தலையிடக் கூடாது என்றும் அவர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். (2)

## 12 வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு முகக்கவசம் கட்டாயம்

(ஜெனீவா)

12 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள், பெரியவர்களைப் போன்ற அதே நிலைமைகளின் கீழ் கொரோனா தொற்று பரவாமல் இருக்க முகக்கவசங்களை அணிய வேண்டும் என உலக சுகாதார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இருப்பினும் ஆறு முதல் 11 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஆபத்து அடிப்படையிலான அணுகுமுறை யில் அவற்றை அணிய வேண்டும் என்றும் அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சிறுவர்கள் குறிப்பாக மற்றவர்களிடமிருந்து சமூக இடை வெளியைக் கடைப்பிடிக்க முடியாத சூழலில் முக்கவசங்களை அணிய வேண்டும் என உலக சுகாதார அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு வர்களின் பாதுகாப்பு மற்றும் ஒட்டுமொத்த ஆர்வத்தின் அடிப்படையில் ஐந்து வயது மற்றும் அதற்கு மேற்பட்ட சிறுவர்கள் முகக் கவசங்கள் அணியத் தேவையில்லை என்றும் உலக சுகாதார அமைப்பு மற்றும் யுனிசெப் தெரிவித்துள்ளது. (2)

# ஸ்பானிஷ் ப்ளூ வ
# இரு ஆண்டுகளு
## உலக சுகாதார அமை

(ஜெனீவா)

**தற்போது இருக்கும் தொழில்நுட்பம், நவீன முடிவுக்கு கொண்டுவர முடியும் என உலக சுகாதார வெளியிட்டுள்ளார்.**

கடந்த 1918 ஆம் ஆண்டில் உலகையே உலுக்கிய ஸ்பானிஷ் ப்ளூ வைரஸ் காய்ச்சல் போன்று கொரோனா வைரஸ் நீடிக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் என்பது நூற்றாண்டுகளுக்கு ஒரு முறை வரும் சுகாதாரம் சார்ந்த பிரச்சினை என தெரிவித்த அவர் கடந்த 1918 ஆம் ஆண்டில் ஸ்பானிஷ் ப்ளூ காய்ச்சல் பரவிய வேகத்தைவிட, இந்த கொரோனா தொற்றை வேகமாக பரவுவதற்கு உலகமயமாக்கல், நெருங்கிய தொடர்பு, போக்குவரத்து ஆகியவை அனுமதித்துவிட்டன என்றும்

## கலிபோர்னியாவில் பரவிவரு



(கலிபோர்னியா)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக காட்டுத் தீ பரவி வருகிறது.

இந்தக் காட்டுத் தீ காரணமாக இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

கலிபோர்னியா மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட மின்னல் தாக்குதல்கள் காரணமாக 367 இடங்களில் காடு தீப்பற்றி எரிந்து வருகிறது.

இதனால் சான்பிரான்சிஸ்கோ பகுதியை சுற்றியுள்ள பாலோ, ஆல்டோ போன்ற இடங்களில் காட்

# லிபியாவில் போர் ந
## அரச- கிளர்ச்சியாளர்கள்

(திரிபோலி)

லிபியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டு போரை உடனடியாக நிறுத்துவதாக அரசு படையினர் தெரிவித்தனர்.

கிளர்ச்சியாளர்களும் இந்த முடிவை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

லிபியாவில் ஆட்சியில் இருந்த சர்வாதிகாரி கடாபி, 2011 ஆம் ஆண்டு கொல்லப்பட்டதையடுத்து அந்நாட்டில் உள்நாட்டுப் போர் நடைபெற்று வந்தது.

அந்நாட்டில் ஆட்சியை கைப்பற்ற பல்வேறு ஆயுதக் குழுக்களிடையே மோதல் ஏற்பட்டு வருகிறது.



இந்நிலையில் 9 ஆண்டுகளாக நடைபெற்று வந்த உள்நாட்டு போரை உடனடியாக நிறுத்துவதாக ஐ.நா. சபையால் அங்கீகரிக்கப்பட்ட திரிபோலியை தலைநகராக கொண்ட லிபிய அரசு தலைமை நேற்று முன்தினம் அறிவித்தது.



# வெளிநாடு



# வைரஸ் போன்று கொரோனா நீடிக்காது

# ளுக்குள் முடிவுக்குக் கொண்டு வரலாம்

## மைப்பின் தலைவர் நம்பிக்கை



**வீன மருத்துவம் ஆகியவற்றால் 2 ஆண்டுகளுக்குள்ளே வைரஸை**
**ாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதனம் கெப்ரியாசிஸ் நம்பிக்கை**

சுட்டிக்காட்டினார். ஆனால், ஸ்பானிஷ் ப்ளூ பரவிய போது குறைந்த அளவு தொழில் நுட்பம், மருத்துவக் கண்டுபிடிப்புகள் மட்டுமே இருந்ததால், அதைக் கட்டுப் படுத்தவும் தடுக்கவும் முடியவில்லை.

ஆனால், கொரோனாவை நவீன தொழில்நுட்பம், மருத்துவக் கண்டு பிடிப்புகளால், 2 ஆண்டுகளுக்குள் முடிவுக்கு கொண்டு வர முடியும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

குறிப்பாக அனைத்து நாடுகளின் கூட்டு முயற்சி இருந்தால் நிச்சயம் இந்த விடயம் சாத்தியமாகும் என்றும் உலக சுகாதார அமைப்பின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 1918 ஆம் ஆண்டில் உலகையே உலுக்கிய ஸ்பானிஷ் ப்ளூ வைரஸ் காய்ச்சல் காரணமாக உலகம் முழுவதும் 50 கோடி பேர் அதாவது, உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒருபகுதியினர் பாதிக்கப்பட்டனர். அதேபோன்ற அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது கொரோனா வைரஸ் தாக்கம் என அவர் மேலும் தெரிவித்தார். (2)

## வரும் காட்டுத் தீ

டுத் தீ வேகமாக பரவி வருகிறது. இந்த காட்டுத்தீயால் இதுவரை 2 இலட்சத்து 20 ஆயிரம் ஏக்கர் அளவிலான காடுகள் உள்ளிட்ட நிலப் பரப்புகள் எரிந்து நாசமாகியுள்ளன. 480 வீடுகள் தீக்கிரையாகியுள்ளதுடன், தீயணைப்பு வீரர்கள் உட்பட 50 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.


மேலும், ஒரு இலட்சத்து 75 ஆயிரம் பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் காட்டுத்தீயினை கட்டுப்படுத்த 375 இற்கும் அதிகமான தீயணைப்பு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, 10 ஆயிரத்திற்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் தீயினை கட்டுப்படுத்த போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# கொரோனாவை தடுக்க களிம்பு கண்டுபிடிப்பு

(வோஷிங்டன்)

உலக நாடுகளையெல்லாம் உலுக்கி வருகிற கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்கான தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் அமெரிக்க மருந்து நிறுவனம் ஒன்று, கொரோனாவை தடுக்கும் களிம்பு ஒன்றை உருவாக்கி உள்ளது. இதற்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. அதன்பேரில் இந்த களிம்பு பரிசோதிக்கப்பட்டுள்ளது. இந்தக் களிம்பை (மூக்கில்) தடவிக்கொண்ட 30 வினாடிகளுக்கு பிறகு எந்த வைரஸ் தொற்றும் கண்டறியப்படவில்லை என பரிசோதனை அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த களிம்பு 'டி3 எக்ஸ்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. (2)



# ர் நிறுத்தம்
# கள் அறிவிப்பு



இந்த அறிவிப்பு வந்த உடன் கடாபியின் ஆதரவு கிளர்ச்சியாளர் கலிபா கப்தார் தலைமையிலான கிளர்ச்சியாளர்கள் குழுவும் தாங்களும் லிபியாவில் போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்பதாக தெரிவித்தது.

எண்ணெய் வளம் மிக்க லிபியாவில் விரைவில் பொதுத் தேர்தலை நடத்த இரு தரப்பினரும் விருப்பம் தெரிவித்துள்ளனர். இதனால் தற்போதைய போர் நிறுத்தம் உள்நாட்டுப்போரை நிரந்தரமாக முடிவுக்கு கொண்டுவர முதல் முயற்சி என ஐ.நா. உட்பட பல்வேறு நாடுகள் வரவேற்பு தெரிவித்துள்ளன. (2)

# துருக்கி கடற்பரப்பில் பாரிய இயற்கை எரிவாயு வளம் கண்டுபிடிப்பு

(அங்காரா)

துருக்கி கடற்பரப்பில் 320 பில்லியன் கன மீற்றர் அளவிற்கு இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி எர்டோகன் தெரிவித்துள்ளார்.

துருக்கி தன் நாட்டை சுற்றியுள்ள கருங்கடல் மற்றும் மத்திய தரைக்கடல் பகுதியில் இயற்கை எரிவாயுவை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.



மத்திய தரைக்கடல் பகுதியில் துருக்கி மேற்கொண்டு வரும் இயற்கை எரிவாயுவை கண்டுபிடிக்கும் பணிக்கும் அந்த கடல்பகுதியில் அமைந்துள்ள கிரீஸ், தங்கள் நாட்டுக்கு சொந்தமான கடற்பரப்பில் சட்டவிரோதமாக இயற்கை எரிவாயுவை கண்டுபிடிக்கும் முயற்சியில் துருக்கி இறங்கியுள்ளதாக கடும் கண்டனத்தை வெளியிட்டு வந்தது.

இந்நிலையில், துருக்கியின் கடல்பகுதியில் உள்ள கருங்கடலில் மிகப்பெரிய அளவில் இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஜனாதிபதி எர்டோகன் தெரிவித்துள்ளார்.

துருக்கியின் வரலாற்றில் கருங்கடலில் 320 பில்லியன் கனமீற்றர் அளவில் இயற்கை எரிவாயு இருப்பதை துருக்கி கப்பல் கண்டுபிடித்துள்ளது.

ரூமேனியாவின் எல்லைப் பகுதியில் உள்ள கருங்கடலின் மேற்கு பகுதியில் துருக்கியின் கப்பல் கடலில் துளையிடும் பணியை மேற்கொண்டு வந்தது. அப்போது தான் இந்த இயற்கை எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டதாக துருக்கி ஜனாதிபதி தெரிவித்தார். (2)

# நாட்டில் அதிகரித்துச் செல்லும் சிறுவர் துஷ்பிரயோகங்கள்

(கொழும்பு)

**நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. 9512 சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில்மேலும்தெரிய வருவதாவது, சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை பல மில்லியன் ரூபா செலவு செய்து சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக நடத்திய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் எதுவித முன்னேற்றத்தையும் காட்டவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை 29 மில்லியன் ரூபா செலவு செய்து 3165 பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு இருந்த போதிலும் நாடளாவிய ரீதியில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துச் செல்வதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளன. இக்காலப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகள் 6076 இலிருந்து 9512 ஆக அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடுகிறது. எனினும் முறைப்பாடு செய்யப்படாத சிறுவர் துஷ்பிரயோகங்கள் மிக அதிகம் என்பதுடன் நாடளாவிய ரீதியில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் வேகமாக அதிகரித்துச் செல்வதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. மேலும் பல முக்கிய பதவிகள் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் நீண்ட காலமாக வெற்றிடமாக உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(ஜ)

# போதைப்பொருள் மோசடி தொடர்பில்

## சட்டமா அதிபர் ஐ.நா.அதிகாரிகளுடன் கலந்துரையாடல்

(கொழும்பு)

சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐ.நா.அலுவலகத்தின் இலங்கைத் தலைவர், சர்வதேச போதைப்பொருள் கடத்தல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் பயங்கரவாதம் தொடர்பான ஐ.நா.கடல்சார் நிபுணருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது சர்வதேச போதைப்பொருள் மோசடி, பயங்கரவாதம் மற்றும் பிற குற்றச் செயல்கள் மற்றும் அது தொடர்பான சட்டரீதியான கவலைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பாளரும் சட்டத்தரணியுமான நிஷாரா ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற சர்வதேச மோசடிகளால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் விவாதங்கள் நடத்தப்பட்டதாகவும் பிராந்தியத்தைப் பாதிக்கும் சட்டச் சிக்கல்கள் குறித்து இரு தரப்பினரும் பயனுள்ள விவாதங்களை மேற்கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ-4)

# மற்றுமொரு துப்பாக்கிதாரி சுட்டுக்கொலை

(கொழும்பு)

பாதாள உலகக்குழு உறுப்பினரான அங்கொட லொக்காவின் பிரதான உதவியாளரும் துப்பாக்கிதாரியுமான சமிந்த சந்தமால் எதிரிசூரிய என்பவர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் பிரபல பாதாள உலகக் குழுத்தலைவரான அங்கொட லொக்காவின் குழுவின் மற்றுமொரு துப்பாக்கிதாரியான "சமியா" என்ற சமிந்த சந்தமால் எதிரிசூரிய என்பவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கம்பஹாவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் பொலிஸாரை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்த போது அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, "சொல்டா" என்ற அசித ஹேமதிலக என்ற அங்கொட லொக்காவின் குழுவைச் சேர்ந்த பிரதான துப்பாக்கிதாரி பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# வரவு - செலவுத் திட்டத்தில் முதலீட்டாளர்களுக்கு நிவாரணம்

(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய வழிமுறைகள் அறிமுகப்படுத்துவது அவசியம் என்று இராஜாங்க நிதி அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

நாட்டின் பாரம்பரிய கைத்தொழில் உற்பத்திகளுக்கு அதிக பட்ச கேள்வியை ஏற்படுத்துவது அரசாங்கத்தின் நோக்கம் என்று குறிப்பிட்ட நிதி இராஜாங்க அமைச்சர், வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளூர் உற்பத்தி மற்றும் கைத்தொழில் துறைக்கு முன்னுரிமை வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்.

முதலீடுகளை வலுப்படுத்தக் கூடிய பொறிமுறையொன்றைத் தயாரித்து தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கு உள்ளூர் உற்பத்திகளின் ஏற்றுமதிக்கு அரசாங்கம் முன்னுரிமை



வழங்கியுள்ளது என்றும் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். (ஜ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பேராசை

அள்ள அள்ள குறையாதது அட்சயபாத்திரம் அது நமக்குத் தெரியும். கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் போடப்போட நிரம்பாத ஒரு பாத்திரம் உண்டு. அது என்ன தெரியுமா? நம்மில் பல பேரிடம் அந்த பாத்திரம் உண்டு அது தான் ''பேராசை'' என்கின்ற பாத்திரம் அதை நிறைவு செய்யவே முடியாது.

பேராசையைப் பற்றி சூஃபி இலக்கியத்திலே ஒரு பிரபலமான கதை உண்டாம். அதை ஒரு பெரியவர் (சுவாமி சுகபோதானந்தா) எடுத்துச் சொல்லியிருக்கின்றார். ஒரு மன்னர் நகர் வலம் போய்க் கொண்டிருந்தார்.

ஒரு பிச்சைக்காரன் மன்னர் எதிரிலே வந்தான். "பிச்சை கொடுங்கோ" என்றான். "என்னுடைய அமைதியைக் கெடுக்காதே... போ" என்றார் மன்னர். அவன் சிரித்தான்.

அரசே, உங்கள் அமைதி கெடக்கூடிய நிலையில் இருந்தால் அதற்குப் பெயர் அமைதியே கிடையாது என்றான். எதிரிலே நிற்கின்றது வெறும் பிச்சைக்காரன் இல்லை...யோகி என்கின்றதை மன்னர் புரிந்து கொண்டார். துறவியே, உங்களுக்கு என்ன வேணும் என்றாலும் கேளுங்கள் கொடுக்கின்றேன் என்றார்.

அந்தத் துறவி மறுபடியும் சிரிக்கின்றார். ''அரசே உங்களாலே முடியாததையெல்லாம் கொடுக்க முடியும் என்று சத்தியம் செய்யாதீர்கள்'' என்றார். மன்னருக்கு கோபம் வந்து விட்டது. என்ன இவர் இப்படி சொல்லுகின்றார் என்று நினைத்தார்.

நகர்வலத்தை பாதியிலே நிறுத்தினார். வாங்கோ அரண்மனைக்கு என்றார். துறவியை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வந்தார். துறவி தன்னிடம் இருந்த பிச்சைப் பாத்திரத்தை நீட்டினார். ''இது நிறைய எனக்குப் பொற்காசுகள் வேணும்'' என்றார்.

இவ்வளவு தானா என்று சொல்லிக்கொண்டே கையைத் தட்டினார் மன்னர். ஒரு பெரிய தாம்பாளம் நிறைய பொற்காசுகள் வந்து சேர்ந்தன. அதை அள்ளிப் போட்டார். போடப்போட அந்தப் பிச்சைப் பாத்திரம், பொற்காசுகள் அத்தனையும் உள்ளே வாங்கிக் கொண்டே இருக்கின்றது.

அரசாங்க கஜானாவே காலியாகி விட்டது. மூட்டை மூட்டையாக பொற்காசுகளை கொட்டிவிட்டாச்சு. அது விழுங்கிக்கொண்டே இருக்கின்றது. கடைசி வரை அந்த பிச்சைப் பாத்திரம் நிரம்பவே இல்லை. அரசனிடம் இருந்த கர்வம் போய் விட்டது. அப்படியே பொத்தென்று துறவி காலிலே விழுந்தார். அப்பொழுது அந்த துறவி சொன்னாராம். மன்னா இந்த பிச்சைப் பாத்திரத்தை உங்களாலே மட்டும் இல்லை வேறு யாராலும் நிரப்ப முடியாது.

அதற்கு என்ன காரணம் என்றால் இது சாதாரண பிச்சைப் பாத்திரம் அல்ல...பேராசைகளுடன் வாழ்ந்து இறந்து போன ஒரு மனிதனின் மண்டையோடு இது என்றார். பாருங்கள் இது தான் அந்த சூஃபி இலக்கியக் கதை. இறந்த பிறகும் நிறைவு இல்லை என்றால் அது எப்படிப்பட்ட பேராசையாக இருக்கும் என்று யோசித்துப் பாத்துக் கொள்ளுங்கள்.

எங்கள் ஆள் ஒருத்தன் திருமணம் செய்து கொள்ள பெண் பார்த்துக் கொண்டிருந்தார். அழகு, அறிவு, படிப்பு எதுவும் தேவை இல்லை. பணம் மட்டும் இருந்தால் போதும் என்று பார்க்கின்றவர்கள் எல்லோரிடமும் சொல்லி வைத்தார். பல நாட்களின் பின் ஒரு பணக்காரர் கிடைத்தார். அவர் சொன்னார். இதோ பாருங்கள் எனக்கு இருபது வயதிலே ஒரு மகள் அவளை நீங்கள் திருமணம் செய்து கொண்டால் இரண்டு இலட்சம் பணம் கொடுப்பேன்.

இருபத்துஐந்து வயதிலே ஒரு பெண் இருக்கின்றார் அவரைத் திருமணம் செய்து கொண்டால் இரண்டரை இலட்சம் தருவேன். முப்பது வயதிலே ஒரு பெண் உள்ளார் அவளை திருமணம் செய்து கொண்டால் மூன்று இலட்சம் தருவேன். என்ன சொல்லுகின்றாய்? என்றார். அவன் கொஞ்சநேரம் யோசித்தான். அதன் பின் அவரை நிமிர்ந்து பார்த்தான்.'' ஏன் சேர்....உங்களிடம் ஐம்பது வயதிலே ஏதாவது பெண் உள்ளாரா?'' என்று கேட்டார்.

# வளிமண்டலம் மீண்டும் மாசடைவு
# சுவாச நோய்கள் ஏற்படும் அபாயம்
## எச்சரிக்கிறார் சுவாச நோய் வைத்தியர்

(கொழும்பு)

**கொழும்பு நகர வளிமண்டலத்தின் வளிமண்டல மாசடைதல் நிலை கொவிட் - 19 காலப்பகுதியில் நல்ல சுகாதாரமான நிலையிலிருந்து தற்போது மீண்டும் பழைய நிலையான தூசுநிலை 100 - 125 Ug/m³ என்ற வளிமண்டலத் தூசுநிலை காட்டியை நோக்கி நகர்வதாகச் சுவாச நோயியல் வைத்தியர் கமந்த அத்துகோரள எச்சரித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதனால் சுவாசம் சம்பந்தமான நோய்கள் குறிப்பாக சிறுவர்களுக்கு ஆஸ்துமா போன்ற நோய்கள் அதிகரிப்பதுடன் மக்களின் ஆயுட்காலமும் குறைவடையும் அபாயம் உண்டு என்றும் பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் நகரின் வெளிப்புறங்களை நோக்கி இடமாற்றப்படுவது அவசியம் என்றும் இதனால் சிறுவர்கள் மற்றும் நோயாளர்கள் நாளின் பெரும் பகுதியை நல்ல சுத்தமான வளியை சுவாசிக்கும் நிலை ஏற்படும் என்றும் மக்கள் குறிப்பாக வயோதிபர்கள் கிராமப் புறங்களில் வாழ்விடங்களை அமைத்துக் கொள்வது, தூய்மையான வளியை சுவாசிக்கக் கூடியதாக இருப்பதுடன் சுவாச நோய்களைத் தவிர்க்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ள சந்திரிகா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அணி ஒன்றைத் தனியாக ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகளில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஈடுபட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பாக அதிருப்தியில் இருக்கும் கட்சியினரை அவர் இவ்வாறு ஒருங்கிணைத்து வருகிறார்.

இவ்வாறு ஒருங்கிணைக்கப்படும் ஸ்ரீலங்கா சுதந்திரக்



கட்சியின் பின்வரிசை அரசியல்வாதிகளை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படமாட்டாது என்பதுடன் எதிர்காலத்தில் தெரிவாகும் புதிய தலைவரின் கீழ் இவர்களை இணைக்க சந்திரிகா திட்டமிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்களுடன் கலந்துரையாடி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# உருளைக்கிழங்கு விலையில் மாற்றம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மீது விதிக்கப்படும் வரியை அதிகரிக்கும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி ஒரு கிலோ உருளைக்கிழங்குக்கான இறக்குமதி வரி 50 ரூபாவில் இருந்து 55 ரூபாவாக அதிகரிப்பதாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விசேட பொருட்களுக்கான சட்டத்தின் கீழ் குறித்த வரி அதிகரிப்பானது நான்கு மாத காலத்திற்கு அமுலில் இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய உருளைக்கிழங்கு விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கில் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஐ)

# பொறியில் சிக்கி மேலும் ஒரு சிறுத்தை உயிரிழப்பு





(கொழும்பு)

கம்பளை, தொலுவ பகுதியில் நேற்றைய தினம் மேலும் ஒரு சிறுத்தை பொறியில் சிக்கி உயிரிழந்துள்ளது.

இது தொடர்பில் தகவலறிந்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் குறித்த பகுதிக்கு சென்று சிறுத்தையை பார்வையிட்டுள்ளதுடன், இது தொடர்பான விசாரணைகளையும் ஆரம்பித்துள்ளனர். (ஐ)

# 1700 பில்லியன் ரூபாவுக்கான இடைக்கால கணக்கறிக்கை

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல்கள் அடுத்து வரும் மாதங்களில் நடத்தப்படவிருக்கும் நிலையில் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சித்துறை அமைச்சுக்கு அரசாங்கத்தின் இடைக்கால கணக்கறிக்கையில் அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே 1700 பில்லியன் ரூபாவுக்கான அரசாங்கத்தின் இடைக்கால கணக்கறிக்கை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்நிலையில் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சித்துறை அமைச்சுக்கு 194 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சுக்கு 174 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சுக்கு 136 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான நகர அபிவிருத்தி மற்றும் புத்தசாசன அமைச்சுக்கு முறையே 27 பில்லியன் ரூபாவும் 2.8 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தவிர அரசாங்கத்தின் செலவீனங்களுக்காக 1.3 ரில்லியன் ரூபாவை உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கடன்கள் மூலம் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. (ஐ)

# கைப்பையை திருடி ரயிலிலிருந்து குதித்தவர் பொலிஸிடம் சிக்கினார்

(கொழும்பு)

அளுத்கமவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் பெண்ணொருவரின் கைப்பையைத் திருடி, ஓடும் ரயிலிருந்து குதித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று அதிகாலை மொரட்டுவ எகொடஉயன ரயில் நிலையத்திலிருந்து ரயில் நகரும் போது, பெண்ணின் கைப்பையைப் பறித்துக் கொண்டு ரயிலிருந்து கீழே குதித்துள்ளார்.

எனினும் பொது மக்களின் உதவியுடன் ரயில் நிலையத்தில் வைத்து பொலிஸார் அவரைக் கைதுசெய்துள்ளனர். (ஐ)

# ரயில் திணைக்களத்தின் நாளாந்த வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவலுடன் வீழ்ச்சியடைந்திருந்த ரயில் திணைக்களத்தின் நாளாந்த வருமானம் தற்போது அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ரயில் திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

தூர சேவையில் ஈடுபடும் ரயில்கள் மூலமே அதிகளவு வருமானம் ஈட்டப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பயணிகள் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டிருந்ததுடன் அந்தக் காலப்பகுதியில் ரயில் திணைக்களத்தின் நாளாந்த வருமானம் 16 முதல் 18 மில்லியன் ரூபாவாகக் காணப்பட்டது.

தற்போது அது வழமைக்குத் திரும்பியுள்ளதாக ரயில் திணைக்களத்தின் பொதுமுகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ஐ)

# அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் 156 விண்ணப்பங்களில் 40 நிராகரிப்பு

(கொழும்பு)

அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் 156 விண்ணப்பங்களில் 40 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மூன்று வருடங்களின் பின்னர் இந்த நிராகரிப்பு இடம்பெற்றுள்ளது.

உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத நிலையிலேயே இந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நாட்டில் 70 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் உள்ளன.

தேர்தல்கள் நடத்தப்படவேண்டியிருந்தமை காரணமாக 2017 ஆம் ஆண்டு முதல் அரசியல் கட்சிகளை பதிவு செய்யும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

எனினும் 2020 ஜனவரியில் இருந்து அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இதன் அடிப்படையில் கடந்த வாரத்தில் நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டபோது 40 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. (ஐ)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

50

கலாநிதி முருகர் குணசிங்கம்

பிரித்தானியாவில் 28 தமிழ்ச் சங்கங்கள், 30 சமூக சேவை நிறுவனங்கள், 50 கலை, பண்பாட்டு மையங்கள், 77 திருமணச் சேவைகள், 10 இற்கும் அதிகமான திருமண மண்டபங்கள் அவை சார்ந்த 40 இற்கும் அதிகமான உணவு பரிமாறும் சேவை மையங்கள், 30 திருமண நாட்டிய, அலங்கார மையங்கள், 20 திருமணப் புகைப்படச் சேவை நிறுவனங்கள் ஆகியன இயங்கி வருகின்றன.

மேலும் 32 வானொலி, தொலைக் காட்சிச் சேவைகள், 14 செய்தித்தாள்கள், 71 எழுத்தாளர் சங்கங்களும் செயற்பட்டு வருகின்றன. இருபதுக்கும் மேற்பட்ட விளையாட்டுச் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

கனடாவில் 30 இற்கும் மேற்பட்ட சைவ சமயக் கோயில்கள், 25 தமிழ்ச் சங்கங்கள், சமூக சேவை நிறுவனங்களும் 100 இற்கும் மேற்பட்ட சங்கீதம், நாட்டியம், இசைக்கலை நிறுவனங்கள், 50 இற்கும் மேற்பட்ட திருமண மண்டபங்கள், 50 இற்கும் மேற்பட்ட திருமண நிகழ்வுப் படப்பிடிப்பகங்கள், 40 இற்கும் மேற்பட்ட திருமண அலங்கரிப்பு மையங்கள், 10 இற்கும் மேற்பட்ட விளையாட்டுச் சங்கங்களும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களாக இயங்கி வருவதைக் காண முடிகிறது.

மேற்கண்ட எண்ணிக்கையைவிடக் கூடுதலான நிறுவனங்கள் கனடாவில் இயங்கி வருவதாகத் தெரிய வருகிறது.

அவை பதிவு செய்யப்படாத நிறுவனங்களாகவே உள்ளன. அதே நிலைமைகள் தாம், ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் அனைத்து நாடுகளிலும் காணப்படுகின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் வாழுகின்ற ஈழத்தமிழர்களின் தொகையைப் பொறுத்து மேற்படி நிறுவனங்களின் செயற்பாடுகள் அமைந்து உள்ளன.

பதிவு செய்யப்படாமல் தனியார்களால் வீடுகளில் வைத்து நடத்தப்படும் கலை, பண்பாட்டு மையங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்க்க முடியவில்லை.

மேற்கூறப்பட்ட நான்கு நாடுகளைத் தவிர எஞ்சியுள்ள நாடுகளில் பல நூற்றுக்கணக்கான கலை, பண்பாட்டு மையங்களும் அவை சார்ந்த நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

தனியார் தமிழ்க் கல்வி நிறுவனங்களும் சங்கீதம், நாட்டியம், இசைக்கலை சார்ந்த தனியார் நிறுவனங்களும் பல மாணவர்களை ஒரு வகுப்பில் இணைத்து வார நாட்களில் பணம் பெறுகின்றனர்.

இத்தகைய முயற்சிகளில் எத்தனை நிறுவனங்களும் தனிநபர்களும் ஈடுபட்டுள்ளனர் என்பதனையும் துல்லியமாகக் கணக்கிட முடியவில்லை.

ஆனால் அவர்களும் ஈழத்தமிழர்களின் கலை, பண்பாட்டு விழுமியங்களை வளர்ப்பதிலும் பேணிப் பாதுகாப்பதிலும் பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றனர் என்பதனை மறுக்க முடியாது.

பல நூற்றுக்கணக்கான சைவத் தனியார் நிறுவனங்களும் தனிப்பட்டவர்களும் பாரம்பரியக் கலைகளான சங்கீதம், வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், நாடகம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் போன்றவற்றை இளம் தலைமுறையினருக்குப் பயிற்றுவித்துப் பல இளம் கலைஞர்களை உருவாக்கி வருகின்றார்கள்.

சமூக சேவை மையங்கள், தமிழ்ச் சங்கங்கள், சைவக் கோயில்கள், தமிழ் மொழிப் பாடசாலைகள், பல கலை நிகழ்ச்சிகளையும் கோயில் திருவிழாக்கள், திருமண வைபவங்கள், புத்தாண்டுப்பிறப்பு, தீபாவளி, தைப்பொங்கல் ஆகிய தமிழர் பண்பாட்டு நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றார்கள்.

மேற்கண்ட நாடுகளில் அமைந்துள்ள திருமண மண்டபங்களும் அங்கு நடைபெறும் திருமண வைபவங்களும் தமிழர்களின் பண்பாட்டு நிலையங்களாகக் காட்சியளிக்கின்றன.


கனடாவிலுள்ள இந்து ஆலயம்

சைவக் கோயிலில் இடம்பெறும் பல்வேறு நிகழ்வுகள் ஒட்டுமொத்தத் தமிழர்களின் கலை, பண்பாட்டு வடிவங்கள் ஓர் இடத்தில் சங்கமமாகும் கலை, பண்பாட்டு அரங்கமாகவே திகழ்கின்றன.

கணவன், மனைவி, பிள்ளைகள், தாய், தந்தை என்ற இறுக்கமான குடும்ப இணைப்பையும் உற்றார், உறவினர், நண்பர்கள் என்ற சமூக உறவையும் ஒருங்கிணைக்கும் ஒரு சமூக வலைப் பின்னலை உருவாக்கும் ஒரு நிகழ்வாகவும் விளங்குகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒற்றுமையும் ஒருமைப்பாடும் தனித்துவமும் கொண்ட பலமான ஈழத்தமிழர்கள் என்ற ஒரு தேசிய அடையாளத்தின் உச்சக்கட்ட வடிவத்தினையும் இப்பண்பாட்டு நிகழ்வுகள் உலகத்திற்குப் பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றன.

### தமிழ்மொழி வளர்ச்சியும் அடையாளமும்

மொழி என்பது ஓர் இனத்தின் கலை, பண்பாட்டு விழுமியங்களுடன் இறுக்கமாகப் பின்னிப் பிணைந்து ஒன்றையொன்று விட்டு அகலாமல் பயணிக்கும் பண்பைக் கொண்டது ஆகும். ஓர் இனத்தின் தனித்துவமான அடையாளத்தை வெளிப்படையாகக் காட்டக்கூடிய கலை, பண்பாடு, மொழி ஆகிய காரணிகளுள் மொழியே முதன்மை பெறுகிறது.

கலை, பண்பாட்டு விழுமியங்களை ஒரு பாரிய விருட்சமாகவும் மொழியை அதன் ஆணிவேராகவும் கருதலாம். அந்த ஆணிவேரே அற்றுப் போகும் போது அம்மரத்தின் இலைகளும் கிளைகளும் பட்டுப்போகும்.

கருகாகி உதிர்ந்து மண்ணோடு மண்ணாக மக்கிப் போகும். அதுபோலத்தான் மொழி என்னும் ஆணிவேர் அழிந்தால் கலை, பண்பாடு என்னும் இலைகளும் கிளைகளும் விழுந்து நொறுங்கி விடும்.

ஓர் இனத்தை முற்றாக அழிக்க வேண்டுமென்றால் அந்த இனத்தின் மொழியை அழித்துவிட்டால் அந்த இனம் அடையாளம் எதுவும் இல்லாமல் அழிந்துவிடும்.

எனவே ஓர் இனம் நிலையாக வாழ வேண்டுமெனில் அந்த இனத்தின் மொழி உரிய முறையில் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை கீழ்க்காணும் அறிக்கையை வெளியிட்டது.

சமூகங்கள், குழுக்கள் மற்றும் சில இடங்களில் தனிநபர்கள் தங்கள் பண்பாட்டின் ஒரு பகுதியாகப் பின்பற்றும் பழக்கவழக்கங்கள், பிரதிநித்துவங்கள், வெளிப்பாடுகள், அறிவு, திறமை, கருவிகள், பொருட்கள், கலைப்படைப்புகள், கலாசார வெளியீடுகள் ஆகியவையே "அருவப் பண்பாட்டுப் பாரம்பரியம்" எனப்படும்.

அவை பின்வரும் தளங்களில் வெளிப்படுத்தப்படும்.

அ) வாய்மொழி மரபுகள், வெளிப்பாடுகள், மொழி

ஆ) கலை நிகழ்ச்சிகள்

இ) சமூக நடைமுறைகள், சடங்குகள், பண்டிகை நிகழ்வுகள்

ஈ) இயற்கை மற்றும் பிரபஞ்சம் பற்றிய ஆய்வு, பழக்கவழக்கங்கள்

உ) பாரம்பரியக் கைவினைக் கலைகள்

இவற்றை ஒவ்வொரு இனமும் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

மேற்கண்ட அறிக்கையை வேறு வகையில் நோக்கும்போது ஓர் இனம் தமது பழைய மரபுகளை மிகவும் கவனமாகப் பாதுகாத்து மறுமலர்ச்சி அடையச் செய்ய வேண்டும்.

ஆனால் புலம்பெயர்ந்து வாழும் இளம் தலைமுறையினருள் பலர் தமது பழைய மரபுகளில் இருந்து விலகிச் செல்வதையும் தமது பாரம்பரியத் தமிழ் மொழியில் பேசுவதும் எழுதுவதும் குறைந்து கொண்டு போவதையும் அறிய முடிகிறது.

எனவே அவர்களுக்குத் தமிழ் மொழியைக் கற்பித்து வழிப்படுத்துவதன் மூலம்தான் அவர்களது எதிர்கால வாழ்வை இன அடிப்படையில் உறுதி செய்ய முடியும்.

இல்லாவிட்டால் அவர்கள் அடையாளம் எதுவும் இல்லாத ஊர் பேர் தெரியாத அநாதைகள் ஆகிவிடுவார்கள். எனவே தான் ஓர் இனத்திற்கு மொழி, கலை, பண்பாடு, பாரம்பரியங்கள் எவ்வளவு முக்கியமானவை என்பதனையும் மொழியின் ஊடாகத்தான் அவர்கள் தமது கலை, பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பற்றி நன்கு அறிந்து அவைகளைப் பாதுகாத்து தமது தேசிய அடையாளத்தை நிலைநிறுத்த முடியும் என்பதனையும் உறுதிப்படுத்துகின்ற வகையிலேயே ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை அமைந்து இருக்கின்றது.

பல்லினக் கலாசாரத்தைத் (**Multiculturalism**) தமது அரசின் முதன்மைக் கொள்கையாக்கி அதனைப் பயன் தருகின்ற வகையில் நடைமுறைப்படுத்தும் அவுஸ்திரேலியா, கனடா, ஜேர்மனி போன்ற முதன்மையான நாடுகள், புலம்பெயர்ந்து வந்து தமது நாடுகளில் குடியேறி வாழ்பவர்களுக்கு (**Diasporic Communities**) அவர்கள் சமய, கலை, பண்பாடு, மொழிப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாத்து நடைமுறைப்படுத்துவதற்குப் பல்வேறு சலுகைகளையும் வசதிவாய்ப்புக்களையும் வழங்கி ஊக்குவித்து வருகின்றன.

அவர்களது தாய்மொழியைப் பயன்படுத்துவதற்கும் அவர்களது பிள்ளைகளுக்கு அம்மொழியைக் கற்பிப்பதற்கு நிதி உதவிகளையும் இட வசதிகளையும் வழங்கி வருகின்றன.

மேலும் அரச பாடசாலைகளில் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் கற்பித்தும் வருகின்றன.

அத்தோடு புலம்பெயர்ந்து வாழும் இளம் தலைமுறையினர் தமது பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வுக்கு அவர்களது தாய்மொழியையும் ஒரு முதன்மைப் பாடமாகச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் இசைவு அளித்துள்ளன.

(தொடரும்)

# மின்தடைக்கு அமைச்சே காரணமென்றால் பதவி விலகவும் தயார் என்கிறார் டலஸ்

(கொழும்பு)

**மின்சாரத் தடங்கலுக்கு மின்சக்தி அமைச்சே காரணம் என்றால், பதவி விலகத் தயார் என அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**

நாட்டில் கடந்த வாரம் மின்சார விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டது. இதனையடுத்து இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த நிலையில், குறித்த குழுவின் அறிக்கை இன்று திங்கட்கிழமை விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்நிலையில், மின் துண்டிப்புக்கு மின்சக்தி அமைச்சு பொறுப்புக்கூற வேண்டும் என்று உறுதியானால் அது தொடர்பாக தான் எடுக்கும் நடவடிக்கை தொடர்பாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும கருத்து வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய, தான் 96 மணித்தியாலங்களே மின்சக்தி அமைச்சராக இருந்துள்ளேன் என்றும் மின்சக்தி அமைச்சே தவறுக்கு காரணம் என்றால், நாளை செவ்வாய்க்கிழமையிலிருந்து மின்சக்தி அமைச்சிற்கு வேறு ஒருவர் அமைச்சராக நியமிக்கப்படுவார் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நிகழ்வு இலங்கையில் முதற்தடவையாகப் பதிவாகும் எனவும் அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ)



## வாக்காளர் பெயர்ப்பட்டியலை திருத்தும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

2020 வாக்காளர் பெயர்ப் பட்டியலைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இந்த விடயம் தொடர்பாக தற்போது கிராம உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாக அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, வாக்காளர் பெயர்ப்பட்டியல் பதிவு தொடர்பாக கிராம உத்தியோகத்தரின் ஊடாக வாக்காளர்களின் விபரம் பெறப்படவுள்ளது.

2019 வாக்காளர் பெயர்ப் பட்டியலுக்கு அமைய நாட்டில் ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

## வலம்புரி செய்திக்கு இராணுவம் மறுப்பு

(கொழும்பு)

மாந்தை சங்னார் பிரதேசத்தில் சீனவெடி கொளுத்திய படி மரண ஊர்வலம் சென்ற போது பள்ளமடு சந்திப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் போது வெடி கொளுத்திய நபர்கள் இராணுவத்தினரால் தாக்குதலுக்கு உள்ளாகி மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்கள் என கடந்த 15 ஆம் திகதி வலம்புரி பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்கு, கொழும்பு, ஸ்ரீஜயவர்த்தனபுர இலங்கைத் தரைப் படைத்தலைமையகம் மறுப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் படைத்தலைமை அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இச்செய்தியை இலங்கை இராணுவம் கவனத்தில் கொண்டு இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் போது இந்த மரண ஊர்வலத்தில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பின் போது இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாகவும் இச்சம்பவத்துடன் இராணுவத்திற்கு எந்தவிதமான தொடர்புகளும் இல்லையென்றும் தெரிவிக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2094

### தரன்

ஆடம்பரம் என்பது ஆடும் பம்பரம்



எப்போது வேண்டுமானாலும் சாய்ந்து விடலாம்!

### டென்சிகா

எதுக்கு படிக்கிற பையன போட்டு இப்படி அடிக்கிறீங்க...



அட போங்க சேர்! பரீட்சைக்கு கூட போகாம படிக்கிறான்...

### கிமைனா

நான்:- எங்கம்மா அப்பவே சொல்லுச்சு நான் தான் கேக்கல...

அவன்:- என்ன சொன்னாங்க?

நான்:- நான் தான் கேக்கலயே!



### ராஜ்



திமிராக இருக்க நேர்மையானவர்களால் மட்டுமே முடியும்.

### பத்மாவதி

ஆட்டம் முடிந்ததும் ராஜாவும் சிப்பாயும் ஒரே பெட்டியில்... இவ்வளவுதான் வாழ்க்கை...



### டிலானி



கட்டியவளின் கழுத்தில் மின்னுவது... பெற்றவனின் வியர்வைத் துளி...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2020 - 16.09.2020



சார்வரி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்களுடைய இராசி நாதன் சனி இலாப ஸ்தானத்தில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். அவரோடு இலாபாதிபதி குருவும் வக்கிரம் பெற்றிருக்கின்றார். கேதுவும் தனுசு இராசியிலேயே வீற்றிருக்கின்றார். சனி, கேது ஆகிய இரண்டின் பார்வையும் உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே உடல்நலம், மனநலம் ஆகியவற்றில் அடிக்கடி பிரச்சினைகளும், பொருளாதாரப் பற்றாக்குறையும் தோன்றும்.

**உச்ச புதனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு பஞ்சம அஷ்டமாதிபதியானவர் புதன். அவர் ஓகஸ்ட் 29 ஆம் திகதி கன்னி இராசியில் உச்சம் பெறுகின்றார். இக்காலத்தில் பிள்ளைகளின் முன்னேற்றம் திருப்திகரமாக இருக்கும். பூர்வீக சொத்துக்களைப் பிரித்துக் கொள்வது சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். மாமன், மைத்துனர் வழியில் உதவி கிடைக்கும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடக சுக்கிரனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஓகஸ்ட் 31 ஆம் திகதி கடக இராசிக்குச் செல்கின்றார். எனவே உத்தியோக மாற்றங்கள் ஒரு சிலருக்கு உறுதியாகும். உறவினர் பகை அகலும். இல்லத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். அஞ்சல் வழியில் அனுகூலச் செய்தி கிடைக்கும்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்**

செப்டெம்பர் முதலாம் திகதி இராகு -கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. இதுவரை உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு 4ஆம் இடத்திற்கு வருகின்றார். அதே நேரத்தில் 11 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது 10ஆம் இடத்திற்கு வருகின்றார். இதன் விளைவாக தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புதிய பணியை ஏற்கும் சூழ்நிலை அமையும்.

**குருவின் வக்கிர நிவர்த்திக் காலம்**

செப்டெம்பர் 9 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் குரு வக்கிர நிவர்த்தியாகின்றார். உங்கள் ராசிக்கு




தனலாபாதிபதியானவர் குரு. எனவே இக்காலம் இனிய காலமாக அமையும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் வி.ஆர்.எஸ். பெற்றுக்கொண்டு வெளியில் வந்து சுயதொழில் தொடங்கும் வாய்ப்பு கைகூடும்.

**சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்**

செப்டெம்பர் 14 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கும் சனிபகவான் வக்கிர நிவர்த்தியாகின்றார். இதன் விளைவாக உங்கள் இராசிநாதன் பலம்பெறுவதால் துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். வெளிநாட்டிலிருந்து நல்ல தகவல் வரும். ஆரோக்கியம் சீராகும். இம்மாதம் சதுர்த்தி விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் உங்கள் இராசிநாதன் பலம் பெறப்போவதால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். திடீர் வரவு உண்டு. தாய்வழி ஒத்துழைப்பும் திருப்தி தரும். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு இல்லத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும். பணிபுரியும் இடத்தில் ஏற்பட்ட பிரச்சினை அகலும். அம்பிகை வழிபாடு இன்பம் வழங்கும்.

## சகோதர ஒற்றுமை பலப்படும்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு பகவான் தொழில் ஸ்தானம் எனப்படும் 10 ஆம் இடத்தில் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார்.

அவரோடு இலாபாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் இருக்கும் சனி பகவானும் வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். மேலும் கேதுவும் கூடியிருக்கின்றார்.

எனவே ஆரோக்கியம், பொருளாதாரம், தொழில் முயற்சி அனைத்திலும் அதிக கவனம் செலுத்த வேண்டிய மாதம் இது.

**உச்ச புதனின் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 29 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். எனவே அவர் உச்சம் பெறும்பொழுது திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும்.

**கடக சுக்கிரனின் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஓகஸ்ட் 31 ஆம் திகதி கடக ராசியில் சஞ்சரிக்கப்போகின்றார். எனவே பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி செலவிடும் சூழ்நிலை உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. 'உத்தியோகத்தில் பணிநிரந்தரம் ஆகவில்லையே' என்ற கவலை அதிகரிக்கும். உடன் பிறப்புகளால் தொல்லை உண்டு.

**ராகு-கேதுக்களின் பெயர்ச்சிக் காலம்**

செப்டெம்பர் முதலாம் திகதி ராகு-கேது பெயர்ச்சி நிகழவிருக்கின்றது. உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு, இப்பொழுது மூன்றாமிடமான ரிஷபத்திற்கு வரப்போகிறார். 10 ஆம் இடமான தனுசில் சஞ்சரித்து வந்த கேது இப்பொழுது 9 ஆம் இடமான விருச்சிகத்திற்கு வரப்போகின்றார்.

எனவே உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு இடமாற்றம், ஊர் மாற்றம், பணிமாற்றம், விருப்ப ஓய்வில் செல்லும் நிலை உருவாகலாம். கவனமுடன் செயற்பட வேண்டிய நேரமிது.

**குருவின் வக்கிர நிவர்த்திக்காலம்**

செப்டெம்பர் 9 ஆம் திகதி குரு வக்கிர நிவர்த்தியாகின்றார். இக்




காலத்தில் எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும். கொடுத்த கடன்கள் வசூலாகும். ஆரோக்கியத் தொல்லை அகலும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்ள பாடுபடுவீர்கள்.

**சனியின் வக்கிர நிவர்த்திக்காலம்**

உங்கள் இராசிக்கு இலாபாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி பகவான். அவர் வக்கிர நிவர்த்தியாகும் பொழுது கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும். நண்பர்களின் ஒத்துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண்பீர்கள். அரசு மூலம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். பெற்றோர்களின் உடல் நலத்தில் மட்டும் அதிக கவனம் தேவை. இம் மாதம் இல்லத்து பூஜையறையில் பௌர்ணமி விரதமிருந்து பஞ்சமுக விளக்கேற்றி முருகப்பெருமானை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் உங்கள் இராசிநாதன் வக்கிர இயக்கத்தில் இருப்பதால் குருவின் வக்கிர நிவர்த்திக்காலம் வரை பொறுமையும் நிதானமும் தேவை.

உங்கள் உடல்நலத்திலும், உங்கள் தாயின் உடல் நலத்திலும் கவனம் தேவை. மாதத்தின் பிற்பகுதியில் சுபச்செய்திகள் வந்து சேரும்.

உடன்பிறப்புகளின் உதவி கிடைக்கலாம். தும்பிக்கையான் வழிபாட்டை மேற்கொண்டால் நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும்.

## பணவரவு திருப்திகரமாக இருக்கும்

(முற்றும்)

# இராணுவம் வடிவமைத்துள்ள நவீன அம்புலன்ஸ்!



(கொழும்பு)

இராணுவம் தற்போது பல்வேறு படைப்புகளை உருவாக்கி வருகிறது. அவர்களின் அண்மைய வடிவமைப்பு உலகெங்கிலும் உள்ள பிற நாடுகளுக்காகத் தயாரிக்கப்படும் போர்க் கள அம்புலன்ஸ் ஆகும்.

இந்த அம்புலன்ஸ்கள் ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

போர்க்கள அம்புலன்ஸ்கள் தற்போது உலகின் ஒரு சில நாடுகளில் மட்டுமே தயாரிக்கப்படுகின்றன.

எனினும் இலங்கையில் தயாரிக்கப்பட்டுள்ள போர்க்கள அம்புலன்ஸ்கள் அந்த வாகனங்களிலிருந்து பல குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)



# ஆன்மீகம்



## அர்த்தமுள்ள சோதனைகள், ஆண்டவனின் போதனைகள்!

இறைவனின் சந்நிதியில் மனம் உருக வேண்டி மன்றாடினான் பக்தன் ஒருவன். ''ஆண்டவா, கஷ்டங்களே இல்லாத வாழ்க்கையை எனக்குக் கொடு. சோதனைகளும், வேதனைகளும் ஒரு போதும் என் வாழ்வில் ஏற்பட்டு விடக்கூடாது. தினசரி உன் நாமத்தை ஆயிரெத்தெட்டு முறை எழுதி உன் பாதக் கமலங்களில் சமர்ப்பிக்கிறேன் என்றான். அசரீரியாக ஆண்டவன் குரல் ஒலித்தது. ''ஆயிரெத்தெட்டு முறை என் நாமத்தை எழுத வேண்டாம் ஒரே முறை எழுதினால் போதும். ஆனால், நீ எழுதி என் காலில் சமர்ப்பிப்பது ஒரு பக்கக் காகிதமாக இருக்கவேண்டும்!'. பக்தன் திகைத்தான்.

இறைவா! இது என்ன வேடிக்கை! உலகம் முழுதும் தேடினாலும் ஒரு பக்கக் காகிதம் என்று ஒன்று இருக்காதே! அதை உருவாக்கவும் முடியாதே! புன்னகை புரிந்தார் ஆண்டவன். காகிதம் என்றால் இரு பக்கம் இருப்பது போல் வாழ்க்கை என்றால் இன்பமும் இருக்கும், துன்பமும் இருக்கும். துன்பத்தை எதிர்கொண்டு போராடி பிறகு பெறும் இன்பத்தில்தானே சுவை இருக்கும். பகல், இரவு, வெயில், மழை, வெளிச்சம், இருட்டு, உஷ்ணம், குளிர், சுகம், துக்கம், வாழ்க்கை, மரணம் என மாறி மாறி வருவதுதானே உலகின் நியதி!

சொர்க்கத்திலேயே சுக போகங்களைத் தொடர்ந்து அனுபவித்த ஒருவனுக்கு சலிப்பு தட்டியது. பழகப் பழக பாலும் புளிக்கும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது போல் ஆகி விட்டது அவனுக்கு. ஒரு வழியாக ஒரு நாள் சொர்க்கத்திலிருந்து தப்பித்து வெளியே வந்தான். வெளியில் அவன் வந்த பொழுது எதிரே ஒருவன் நரகத்திலிருந்து ரகசியமாகத் தப்பி வருவதைக் கண்டான். இருவரும் நண்பர்களாக ஆனார்கள்.

''நண்பா, நரக வாழ்க்கை எப்படி இருக்கும்? எனக்கு கொஞ்சம் சொல்,'' என்றான். 'அதை ஏன் கேட்கிறாய் எந்நேரமும் சித்ரவதைதான். தாங்க முடியவில்லை. அதுசரி! சொர்க்கவாசத்தைப் பற்றி கொஞ்சம் சொல்லேன்' என்றான் நரகவாசி. ''எந்நேரமும் கும்மாளம், கோலாகலம், கொண்டாட்டம்தான். மாறுதலே இல்லாமல் மகிழ்ச்சி மயமாக இருப்பதால் எனக்கு சலித்து விட்டது. எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. எனக்குப் பதிலாக நீ சொர்க்கத்திற்கும், உனக்குப் பதிலாக நான் நரகத்திற்கும் என மாறி விடுவோம்'' என்றான் சொர்க்கவாசி. ''சரியாகச் சொன்னாய். இப்போது மாறிவிடுவோம். சிலகாலம் சென்ற பிறகு நாம் சந்திக்கலாம்'' என்றான் நரகத்திலிருந்து தப்பித்தவன்.

நாட்கள் நகர்ந்தன. சில கால வாசத்திற்குப் பின் இருவரும் தப்பித்து வந்து சந்தித்துக் கொண்டனர். ஒரே மாதிரியான கருத்தையே இருவரும் கொண்டிருந்தனர். ''துன்பம் வாட்டி எடுக்கும் நரகமும் வேண்டாம். இன்பமே எப்போதும் என்றிருக்கும் சொர்க்கமும் வேண்டாம். இன்பமும் துன்பமும் என இரண்டும் இருந்தால்தான் வாழ்க்கை ருசிக்கும். அத்தகைய பூலோக வாழ்க்கையை நாம் இருவரும் இறைவனிடம் கேட்போம்'' அவர்கள் இருவருக்கும் பூலோக வாழ்க்கையை ஆண்டவன் அளித்தாரோ இல்லையோ நமக்கெல்லாம் அளித்திருக்கிறார். இன்பத்தை வரவேற்பது போல் துன்பத்தையும் இரு கரம் நீட்டி இன்முகத்தோடு வரவேற்போம், ஏற்றுக் கொள்வோம்.

இதைத்தான் மனிதகுலத்திற்கு அன்றே சொல்லி வைத்திருக்கிறார் ஆசான் திருவள்ளுவர்.

இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃது ஒப்பதில்

சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்கொள்ளாமல் சாதனைகள் புரிந்தவர்கள் என்று சரித்திரத்தில் எவருமே இல்லை.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## மஞ்சள் இறக்குமதி தடை நீக்கம் விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

மஞ்சளுக்கு நாட்டில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்கி கலப்படத்தைத் தடுத்து கடத்தலைத் தடுக்கும் முகமாக மஞ்சள் இறக்குமதித் தடை நீக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்துத் தனியார்துறை வர்த்தகர்கள் மஞ்சளை வெளிநாடுகளில் இறக்குமதி செய்ய முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சுங்கத்துறையால் தடுத்து வைக்கப்பட்டிருந்த மஞ்சள் தொகைகள் ஜனாதிபதி செயலக தலையீட்டை அடுத்து விடுவிக்கப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சு தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் மஞ்சள் இறக்குமதி நிறுத்தப்பட்ட பின்னர் ஒரு கிலோ மஞ்சள் **3500/=** முதல் **4000/=** ரூபா வரை விற்பனை செய்யப்பட்டன. அத்துடன் மஞ்சளில் கலப்படம் செய்யப்படுவதாகவும் அமைச்சுக்கு முறைப்பாடுகள் கிடைத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

## விபத்தில் 7 பேர் காயம் ரயிலுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நட்டம்

(கொழும்பு)

தளாவை ரயில் வீதி அமைந்துள்ள குறுக்கு வீதி வழியே பயணித்த கப் ரக வாகனமொன்று மன்னாரிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்துக்கொண்டிருந்த கடுகதி புகையிரதத்தில் மோதியதால் விபத்துச் சம்பவித்துள்ளது.

குறித்த, விபத்தில் சிக்கியதாக கடுமையாக காயங்களுக்கு உள்ளான கப் வண்டியில் பயணித்த 7 பேரும் தம்புத்தேகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரத்திலிருந்து பாதெனிய நோக்கி பயணித்த போதே இந்த கப் வண்டி ரயிலில் மோதியுள்ளதுடன், விபத்து இடம்பெற்ற இடத்திலுள்ள பாதுகாப்புக்கான நுழைவாயில் மூடப்படாமல் இருந்ததெனவும் அவ்விடத்தில் பாதுகாப்பு ஊழியரும் இருக்கவில்லை என்றும் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன், இவ்விபத்து காரணமாக ரயில் பெட்டிகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது என்றும் கப் சாரதியின் கவனயீனமே விபத்துக்குக் காரணமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 140 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 110 | 110 | 130 |
| பச்சைமிளகாய் | 200 | 160 | 180 | 200 |
| தக்காளி | 100 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 110 | 110 | 80 |
| கோவா | 130 | 140 | 140 | 160 |
| கரட் | 80 | 160 | 140 | 160 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 100 | 100 | 60 | 100 |
| வாழைக்காய் | 150 | 140 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 60-100 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 150 | 180 | 170 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 150 | 150 | 100 | 160 |
| பயற்றங்காய் | 160 | 180 | 120 | 160 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 90 | 90 | 120 |
| கறிமிளகாய் | 350 | 400 | 280 | 500 |
| முருங்கைக்காய் | 160 | 150 | 120 | 120 |
| போஞ்சி | 250 | 320 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 60 | 30 | 40 |
| தேசிக்காய் | 100 | 140 | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70-80 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | 300 | -- |
| வெங்காயப்பூ | 250 | 200 | 220 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 50 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 40 | 60 |




# கருப்பங்கழி



விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் தெனாலிராமனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இதைப் பார்த்த மற்ற அரசவையினருக்கு தெனாலி மீது பொறாமை ஏற்பட்டது.

அவர்கள் அடிக்கடி, "அரசே எங்களிடம் என்ன குறை? நீங்கள் ஏன் எங்களை விடத் தெனாலிக்கு அதிக முக்கியத்துவம் தருகிறீர்கள்?" என்று கேட்டனர். இதற்கு பதில் அரசரின் சிரிப்புத்தான்.

ஒருநாள், தெனாலிவிடுப்பில் சென்றிருந்தார். அரசர், அமைச்சர், சேனாதிபதி முதலானோர் மாறுவேடத்தில் நகர்வலம் சென்றனர். பேசிக் கொண்டே ஒரு கிராமத்தை அடைந்தனர்.

ஓரிடத்தில் விவசாயிகள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தார் அரசர். அவர்களிடம் சென்று, "நாங்கள் வெளிநாட்டினர், உங்களை இந்நாட்டு அரசர் சரியாகக் கவனித்துக் கொள்கிறாரா?" என்றார்.

உடனே அனைவரும் அரசரைப் புகழ்ந்தனர். பிறகு அரசர் ஒரு முதிய விவசாயியிடம் அதே கேள்வியைக் கேட்டார். உடனே அவர் சட்டென்று அங்கிருந்து எழுந்து எங்கோ போய் விட்டுப் பிறகு திரும்பி வந்தார்.

அவர் கையில் ஒரு கருப்பங்கழி! வந்ததும் அதை அவர் இரு கையாலும் உடைத்தவாறு, "சகோதரா! எங்கள் அரசர் இதைப் போன்றவர்" என்றார்.

அவரது பதில் அரசருக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அமைச்சரைத் திரும்பிப் பார்த்தார். அமைச்சரோ "அரசே! அவர் உங்களை அவமானப்படுத்துகிறார். அவர், "எங்கள் அரசர் பலவீனமானவர். எவரும் அவரை எளிதில் வீழ்த்தி விடலாம் என்பதைக் குறிக்கக் கரும்பை ஒடித்துக் காட்டினார்" என்றார்.

இதைக்கேட்டதும், அரசருக்கு ஆத்திரம் வந்தது. அவர் ஏதோ கூற வந்தார். அப்போது பின்னாலிருந்து தலைப்பாகை கட்டிய ஒருவர் எழுந்து, "கோபப்படாதீர்கள் தயாநிதியே! இப்போது கிழவர் கரும்பை உடைத்து, அரசர் கரும்பு போல் மேலிருந்து கசப்பும், இடையில் இனிப்பும் உடையவர் என்பதை உணர்த்தத்தான் இப்படி செய்தார்" என்று கூறிக் கொண்டே தனது பொய்த் தாடியை எடுத்தார். அது வேறு யாருமல்ல தெனாலிராமன் தான்.

"அரசே என்னைக் கண்டு பிடிக்க முடியாவிட்டாலும், நான் உங்களது பணியாள். என்னால் உங்களை விட்டு எப்படி இருக்க முடியும்?" என்றார். அதைக் கண்ட அரசர் சிரித்து விட்டார்.

தெனாலியை வாரி அணைத்துக்கொண்டு, "நான் உன்னிடம் பிரியம் வைத்திருப்பதற்குக் காரணமே இதுதான்"என்று புகழ்ந்தார். கேட்டுக் கொண்டிருந்த அமைச்சர், ராஜகுரு மற்றும் சேனாதிபதிக்கு அவமானமாகப் போய் விட்டது. அதன்பிறகு அரசவையில் தெனாலியின் மதிப்பு மேலும் அதிகரித்து விட்டது.

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## இலங்கையில் பறந்த புலிக்கொடி!




மைசூர் நோக்கி சோழர் படை

### மைசூர் படையெடுப்பு

போர்களின் வடிவங்கள் மாறியதே தவிர, போர் புரிவது மட்டும் மாறவேயில்லை. முதலில் கன்னட நாடு, அப்படியே பக்கத்தில் உள்ள வேங்கை நாடு.

இந்த இரண்டு நாடுகளையும் வளைத்த பிறகு கீழைச்சாளுக்கிய நாடு ஈழநாடு என்று ராஜராஜனின் படைக்கு நிறைய வேலைகள் இருந்தன. முதல் கட்டமாக சோழர் படை மைசூரை நோக்கி விரைந்தது.

உண்மையில் ராஜராஜனுக்கு அப்படியொன்றும் நாடு பிடிக்கும் ஆசையும் பொன்னும் பொருளையும் கொள்ளையடிக்கும் எண்ணமும் கிடையாது.

நிச்சயம் அவர் போர் வெறி கொண்டவர் அல்லர். சில போர்கள் உறவுகளைப் பலப்படுத்தவும் சில போர்கள் உறவுகளை அறுத்தெறியவும் சில போர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளாலும் சோழப் பேரரசின் பாதுகாப்புக்காகவும் தொடங்கப்பட்டவை.

அரச வாழ்க்கை என்பது ஒரு பந்தயம் தான். நாம் முதலிடம் வரவேண்டுமென்றால் அடுத்தவனைப் பின்னுக்குத் தள்ள வேண்டும். ஆனால், நம்மைக் கீழே தள்ளிவிட்டு முன்னுக்கு செல்பவர்கள் தான் அதிகம்.

அவர்களை கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்க முடியாது. என்ன செய்யலாம்? என்ன செய்து எதிரியை வீழ்த்தலாம், எப்படி நம்மை தற்காத்துக் கொள்ளலாம் என்கின்ற யோசனையில்லாமல் ஒரு மன்னனால் ஆட்சி செலுத்த முடியாது.

மக்கள் நலம், நாட்டு நலன் இரண்டையும் கருதி, அடைக்கலம் தேடி வந்த சிற்றரசர்களின் பாதுகாப்புக்காகவும், அவர்கள் நட்புக்காகவும் முக்கியமாகத் தடையில்லாத கடல் வாணிபத்துக்காகவும் தொடங்கப்பட்ட போர்கள் தான் பெரும்பாலானவை.

சோழ நாட்டில் உற்பத்தி அதிகமானபோது வணிகம் கட்டாயமாக ஆகியது. கடல் வாணிபம் மூலமாக ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் மும்முரமாக நடைபெற்றது.

அப்போது இன்னொரு தேவையும் ஏற்பட்டது. வணிக வழிகள் மேல் கட்டுப்பாடுகள் இருந்தால் தான் கடல் வணிகம் தடையில்லாமல் நடை பெறும்.

இதனால் தான் ராஜராஜன் வேங்கை (வேங்கி), கலிங்கம் வரை படையெடுக்க வேண்டிய சூழ்நிலை வந்தது. சீன வணிகர்கள் கடாரம், சாவகம் போன்ற இடங்களின் வழியாக சோழ நாட்டுடன் வணிகம் செய்தார்கள்.

அவர்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வடக்கே படையெடுப்பு தேவையாக இருந்தது. படையெடுப்புகளால்தான் இருநூறு வருடம் சோழர்களால் சிக்கலில்லாமல் அயல் வணிகத்தில் ஈடுபட முடிந்தது.

இதற்கான போர் வெற்றிகளே சோழர் சாம்ராச்சியத்தை விரிவுபடுத்திக் கொண்டே போயின.

போரில் வெற்றி பெற்ற பிறகு, அதை வைத்துக் கொண்டு வானுக்கும் பூமிக்கும் ராஜராஜன் குதிக்கவில்லை.

முக்கியமாக, தான் போரில் வென்றவர்களை இழிவுபடுத்தும் எண்ணமோ, அவர்களின் பெயர்களைக் கல்வெட்டில் பொறித்து அவர்கள் மானத்தை வாங்கும் நடவடிக்கைகளிலோ அவர் ஒருபோதும் இறங்கியது கிடையாது.

(தொடரும்)

நாணயமாக இருப்பவர்கள் ஒளிக்கும் இருளுக்கும் என்றும் அஞ்சுவதே இல்லை.
- கதே

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உரிமையோடு கூடிய அபிவிருத்தியே தேவை

இந்த நாட்டின் ஆதிக்குடிகளின் மொழி தமிழ் என்று பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கூறிய கருத்தை பாராளுமன்ற உரைகள் அடங்கிய ஹன்சார்ட்டில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பேரினவாதிகள் முன்வைத்துள்ளனர்.

செம்மொழியாகிய தமிழ் மொழி உலகின் மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி என்று ஆய்வாளர்கள் நிருபணம் செய்து வருகின்றனர்.

எனினும் இலங்கையில் சிங்கள ஆட்சியாளர்கள்; தமிழ் மொழியின் பெருமையை அதன் பழைமையை, வரலாற்றுத் தொன்மையை மழுங்கடிக்கும் வகையில் செயற்படுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

சிங்கள மொழியின் தோற்றம் எத்தனை ஆண்டுகளுக்குட்பட்டதென்பதை மொழியியலாளர்கள் மிகத் தெளிவாக வரையறுத்துக் கூறியிருக்கின்றனர்.

இருந்தும் இலங்கையின் பூர்வீகக் குடிகளின் மொழி தமிழ் என்று கூறுவதை சிங்கள இனவாதிகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர்கள் இந்த நாட்டின் ஆதிக்குடிகளின் மொழி சிங்களம் என்பதாக வரலாறு எழுத முற்படுகின்றனர்.

போதாக்குறைக்கு இராவணேஸ்வரன் சிங்களத் தலைவன் என்பதான கதை அளப்புகளும் நடந்தாகின்றன.

இவ்வாறான மனநிலை சிங்களப் பேரினவாதிகளிடம் இருப்பதன் காரணமாகவே தமிழ் மக்களின் வரலாற்று இடங்களும் தொன்மங்களும் கபளீகரம் செய்கின்ற திட்டங்களைப் பேரினவாதிகள் அமுலாக்கி வருகின்றனர்.

இத்தகைய நிலைமைகள் தமிழ் இனத்துக்குப் பேராபத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்ற போதிலும் அதன் தார்ப்பரியத்தைப் புரிந்து கொள்வதற்கு நம் தமிழர்கள் கூடத் தயாரில்லை என்றே கூறவேண்டும்.

எதுஎவ்வாறாயினும் தமிழ் மக்களின் இன்றைய அவசர தேவை அபிவிருத்தி என விதப்புரை செய்பவர்கள் இருக்கின்றனர்.

தமிழ் மக்களுக்கு அபிவிருத்தி என்பது அத்தியாவசியமானது என்பதை ஏற்றுக் கொள்கின்ற அதேவேளை, அதனையும் கடந்து உரிமை என்ற விடயம் முதன்மைப்படுகின்றது.

ஆம், உரிமை இல்லாத அபிவிருத்தி என்பது அர்த்தமற்றது. எந்த நேரமும் அது கபளீகரம் செய்யப்படக்கூடியது.

எனவே உரிமையோடு கூடிய அபிவிருத்தி என்ற விடயமே இங்கு வலியுறுத்தப்பட வேண்டும்.

இதைவிடுத்து அபிவிருத்தியை ஏற்படுத்திவிட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று நினைப்பது தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற கபடத்தனமேயன்றி வேறில்லை என்பது புரிதற்குரியது.

# அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் பாதகமான அம்சங்களை நீக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர வலியுறுத்து

(கொழும்பு)

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் எதிர்மறையான அம்சங்களை நீக்குவது மிக முக்கியமானது என்று இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய அமைச்சர், சரியான முறையில் செயற்படாத சுயாதீன ஆணைக் குழுக்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் உள்ளிட்ட தேர்தல் முறையில் மாற்றம் செய்வது குறித்தும் கவலைகள் நீடிக்கின்றன. ஒரு வருடத்திற்குள் பாராளுமன்றத்தை கலைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படுவது ஜனநாயக உரிமை என்றும், ஜனாதிபதிக்கு அத்தகைய அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்றும் மேலும் பாராளுமன்றத்தின் மேலாதிக்கம் ஒரு ஜனநாயக நாட்டில் உள்ள மக்களிடம் உள்ளது எனவும் நேர்மறையான அம்சங்களை அறிமுகப்படுத்தும் போது 19 ஆவது திருத்தத்தின் எதிர்மறைகளை ஒழிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஞ)

## விசேட கல்வி அலகு திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விசேட கல்வி அலகு திறப்பு விழா இன்று 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், சிறப்பு விருந்தினராக இணைப்பாளர் திருமதி கௌரி பொன்னம்பலம், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதிக் கல்விப்பணிப்பாளர் (விசேட கல்வி) வி.விஷ்ணுகரன், வலிகாமம் பிரதிப் பணிப் பாளர் (விசேட கல்வி) யோ. துஷ்யந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 25 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** மகாகச்சக்கொடிய கிராமம், ஆண்டியப் புளியங்குளம், கற்கடந்தகுளம், நித்தியநகர், பூவரசங் குளத்திலிருந்து வாரிக்குட்டியூர் வரை, தவசிக்குளம் பிரதேசம், கூமாங்குளம் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படை முகாம், Youth Training Centre, தலைமன்னார் Palmyrah House, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, கரைசல் Palmyrah House Timex ஆடைத் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## இன்று தங்கரதம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் இன்று மாலை 5 மணியளவில் தங்க ரதத்தில் அம்பாள் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (5)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**பொன்னால் செய்த ஆபரணங்களையும் வேட்டி- சேலைகளையும் நாற்காலி, குடம் முதலியவைகளையும் காணும்போது அவற்றைச் செய்தவர் ஒருவர் உண்டு என்று உணர்வது போல், தேகாதி பிரபஞ்சங்களை எல்லாம் காணும்போது இவைகளை உண்டாக்கியவர் ஒருவர் உண்டு என்று நம்புதல் வேண்டும்.**

**- கிருபானந்தவாரியார்**

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## இறைவணக்கம்




இறை என்பது தெய்வநிலையைக் குறிக்கும் ஒரு சிறப்புச் சொல் தெய்வம் என்பது அரூபமான பேராதாலச் சக்தி. மாபெரும் பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் மூலமானதும் புலன்களைக் கொண்டு வேகம், காலம், பருமன், தூரம் என்ற நான்கு அளவைகளாலும் கணிக்க முடியாததும் அறிவு புலன்களின் மூலமாகத் தேடும்போது இல்லையென்றும் தனது ஆறாவது நிலையின் உயர்விலே ஆராயும்போது உண்டு என்றும் உணரக் கூடியதுமான உண்மைநிலை எதுவோ அதுவே தெய்வம் என்று வழங்கப் படுகிறது.

வாழ்வு சிறப்படைய, வளம் பெற்று ஓங்க, உடலுக்கும் உள்ளத்திற்கும் ஒரு நற்பயிற்சியே இறைவணக்கம். வயதிற்கும் அறிவு நிலைக்கும் ஒத்த முறையில் இறைவணக்கம் தேர்ந்து நடத்தி வரவேண்டும். உடல்நலம், பொருள் வளமும் அறிவு இனிமையும் கெடாதவாறு சிக்கனமான முறையில் இறைவணக்கம் அமையவேண்டும். உடல்நலமும் மனவளமும் பெறுவதற்கு மனிதன் தன்னைப் பயிற்றுவித்துக் கொள்வதற்கே, தன்னை மேலும் மேலும் உயர்த்திக் கொள்வதற்கே, இறைவணக்கம் உதவுகிறது என்பதை நன்கறிந்து நினைவில் கொள்ளவேண்டும்.

இன்ப துன்ப உணர்ச்சிகளுக்கு அப்பால் நிற்கும் பரம்பொருளை மகிழ்விக்க வேண்டுமென்று நினைப்பது அறியாமை. இறைவணக்கம் முடிந்த உடன் வாழ்விற்கு வளமளிக்கும் சங்கற்பங்களை ஓதுவது சிறந்த பயனளிக்கும் முறை. உடல்நலம், அறிவு, செல்வம், ஒழுக்கம், அறம், கடமை, கீர்த்தி இவற்றில் மேன்மேலும் சிறப்படைவேன் என்று பலமுறை தானே உறுதி கூறிக்கொள்வது மனிதன் வாழ்வைச் சிறப்பிக்க ஏற்ற உயர்ந்த பயிற்சி.

இறைவணக்கத்தின் மூலம் முழுப்பயன் பெறவேண்டுமெனில் மனிதன்தன் சினம், கவலை, என்ற இருவித மனோ எழுச்சிகளையும் படிப்படியாக குறைத்துப் பின் அடியுடன் போக்கிக் கொள்ளவேண்டும். ஆகவே இறைவணக்கத்தில், இயற்கைத் தத்துவ விளக்கத்தில் வாழ்வின் அனுபவத்தில் சிறந்த அறிஞரைத் துணைகொண்டு, இறைவணக்கம் தேர்ந்து பயின்று ஒழுகி மேன்மையடையுங்கள்.

# தங்கம் வென்ற தமிழக வீரனுக்கு விருது



தமிழக வீரர் மாரியப்பனுக்கு ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டு விளையாட்டு வீரர்களுக்கான பல்வேறு விருதுகளை மத்திய அரசு அறிவித்துள்ளது. அதில், இந்திய மகளிர் ஹொக்கி அணி கப்டன் ராணி ராம்பால், மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத், டேபிள் டென்னிஸ் வீராங்கனை மனிகா பத்ரா, தமிழக வீரர் மாரியப்பன், கிரிக்கெட் வீரர் ரோஹித் ஷர்மா ஆகியோருக்கு ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், கிரிக்கெட் வீரர் இஷாந்த் சர்மா உள்ளிட்ட 27 பேருக்கு அர்ஜுனா விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் பாரா தடகள போட்டிகளில் பல சாதனைகள் புரிந்து, ராஜீவ் காந்தி கேல்ரத்னா விருதுக்கு தேர்வாகியுள்ள மண்ணின் மைந்தர் மாரியப்பனுக்கு, முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி வாழ்த்து தெரிவித்தார்.

பாராலிம்பிக் தொடரில் உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கம் வென்ற மாரியப்பனுக்கு ராஜீவ்காந்தி கேல் ரத்னா விருது அறிவிக்கப்பட்டதற்கு, அவரது தாய் மற்றும் நண்பர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (2)

# அடுத்த ஆண்டில் ஐ.பி.எல். வழமை போன்று நடைபெறும்



அடுத்த வருட ஐ.பி.எல்.போட்டிகள் வழமை போன்று ஏப்ரல் மாதம் ஆரம்பமாகும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்திற்கான ஐ.பி.எல் போட்டி கொரோனா அச்சுறுத்தல் காரணமாக பிற்போடப்பட்டு வந்த நிலையில், ஐக்கிய அரபு இராச்சியத்தில் செப்டெம்பர் 19 ஆம் திகதி முதல் நவம்பர் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், இந்த வருடத்திற்கான ஐ.பி.எல்.போட்டிகள் செப்டம்பர் மாதம் ஆரம்பமானாலும், அடுத்த வருடத்திற்கான போட்டிகள் வழமை போன்று ஏப்ரல் மாதத்தில் இடம்பெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தற்போது காணப்படும் அச்சுறுத்தலான நிலைமைகள் சீர்செய்யப்பட்டதன் பின்னர் இந்தியாவில் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை யின் தலைவர் கங்குலி மேலும் கூறியுள்ளார். (2)

# பாகிஸ்தானின் அணிவிபரம் வெளியீடு

இங்கிலாந்து அணிக்கெதிரான ரி-20 தொடரில் விளையாடும், 17பேர் கொண்ட பாகிஸ்தான் அணி விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாபர் அசாம் தலைமையிலான அணியில், 19வயதான வேகப்பந்து வீச்சாளர் நஸீம் ஷா மற்றும் ஹெய்டர் அலி ஆகியோர் இத்தொடரில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

பாபர் அசாம் தலைமையிலான அணியில், பகர் ஸமான், ஹெய்டர் அலி, ஹரிஸ் ரவுப், இப்திகார் அஹமட், இமாட் வசீம், குஸ்தீல் ஷா, மொஹமட் ஹபீஸ், மொஹமட் ஹஸ்னெய்ன், மொஹமட் ரிஸ்வான், மொஹமட் ஆமிர், நஸீம் ஷா, சப்ராஸ் அஹமட், சதாப் கான், ஷாயீன் அப்ரிடி, சொயிப் மாலிக், வஹாப் ரியாஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ-2)

# ரோஹித் சர்மாவிற்கு ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது






இந்திய கிரிக்கட் அணியின் உப தலைவர் ரோஹித் சர்மாவிற்கு அதி உயர் விளையாட்டு ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது வழங்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை இதனை உறுதிப்படுத்தியுள்ளது.

சிறந்த ஆட்டக்காரர்களில் ஒருவராக திகழும் ரோஹித் சர்மா கடந்த ஆண்டு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாள் போட்டிகளில் ஆயிரத்து 490 ஓட்டங்களை பெற்றதுடன் சராசரியாக 57.30 ஓட்ட நிலையில் பதிவாகியுள்ளார்.

அத்துடன், உலகக்கிண்ண போட்டி தொடரில் ஐந்து சதங்களை அடித்து அதிக ஓட்டங்களை பெற்றவராக தெரிவாகியுள்ளார்.

இது தவிர, டெஸ்ட் போட்டிகளில் பங்கு கொள்ளும் இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக பதவி உயர்வு பெற்றுள்ளதுடன், ஐந்து டெஸ்ட் போட்டிகளில் பங்கு கொண்டு 556 ஓட்டங்களை இந்திய அணிக்காக பெற்று கொடுத்துள்ளார்.

முன்னதாக இந்த விருது சச்சின் டெண்டுல்கர், எம்.எஸ்.டோனி, விராட் ஹோலி ஆகியோருக்கு வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (2)

# டோனியின் ஓய்வை அடுத்து இந்தியா-பாகிஸ்தான் போட்டியை பார்க்க மாட்டேன்

## பாகிஸ்தானை சேர்ந்த டோனியின் தீவிர ரசிகன்

இந்திய அணி வீரர் டோனி இல்லாததால் இனி இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியை காணமாட்டேன் என அவரின் தீவிர ரசிகர் சிகாகோ சாச்சா தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் டோனி, சர்வதேச போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். திடீரென வெளியான இந்த அறிவிப்பு அவரது ரசிகர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்நிலையில் டோனியின் தீவிர



ரசிகரான சிகாகோ சாச்சா என்றழைக்கப்படும் முகமது பஷீர் இனி இந்தியா-பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியை காணச் செல்லபோவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் கராச்சியை சேர்ந்த முகமது பஷீர், சிகாகோவில் வசித்து வருகிறார். உலகத்தில் எங்கு இந்தியா - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி நடைபெற்றாலும் அங்கு முகமது பாஷா கண்டிப்பாக இருப்பார்.

பாகிஸ்தான் அணிக்கு ஆதரவாக இல்லை, டோனிக்கு ஆதரவாக கோஷம் எழுப்புவதற்கு.

இவர் பாகிஸ் தானை சேர்ந்தவராக இருந்தாலும், இந்தியாவின் டோனிக்கு தான் ஆதரவு தெரிவிப்பார்.

இவர் தற்போது டோனியின் ஓய்வு குறித்து மிகுந்த வருத்தம் தெரிவித்துள்ளார். இது குறித்து பேசியுள்ள அவர்,

டோனி இல்லாததால் இனி இந்தியா - பாகிஸ்தான் போட்டி உலகில் எங்கு நடைபெற்றாலும் காண செல்லப் போவதில்லை.

ஒவ்வொரு வீரரின் பயணமும் ஒரு நாள் முடிவுக்கு வரும். ஆனால் டோனியின் ஓய்வு எனக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது என அவர் தெரிவித்தார். (2)

## 12ஆக உயர்வு...

வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதன்போது அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த பெண் புற்றுநோயால் பீடிக்கப்பட்டவர் எனவும் இருதய நோய் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.(ஞா)

## வீட்டின் மீது...

றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இமையாணன் வெள்ளைறோட் பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மீதே நேற்று முன்தினம் சனிக்கிழமை நள்ளிரவு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்தவர்கள் நித்திரைக்குச் சென்ற சமயம் பாரிய வெடிப்புச் சத்தம் கேட்டதாகவும் இதனைத் தொடர்ந்து வீட்டின் வாசல் பகுதியில் கரும் புகை படிந்த நிலையிலும் அங்கிருந்த கதிரை மற்றும் துவிச்சக்கரவண்டி, ஜன்னல் என்பன சேதமடைந்துள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (ஞா-60)

## ஆறு பேர்...

பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

ஆவா குழுவைச் சேர்ந்த சந்தேகநபர்கள் என்ற குற்றச்சாட்டில் 6 பேரை பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 60 கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஞா-101)

## உழவு இயந்திர...

இளம் குடும்பஸ்தர் ஒருவர் தவறி விழுந்து சில்லினுள் சிக்குண்டு பலியானார்.

இச்சம்பவம் நேற்று மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை விழிசிட்டிப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த, ஒரு பிள்ளையின் தந்தையான உதயகுமார் சுரேஷ்குமார் (வயது - 36) என்பவரே பலியானார்.

மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரம் மின் கம்பத்துடன் மோதுண்டதாலேயே இச்சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-18,104)

## நிபுணர்கள் குழு...

தாக தெரிவிக்கப்படுகிறது.

அதற்கமைய எதிர்வரும் தினத்தில் குறித்த குழு நியமிக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தின்போது 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்துச் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியது.

அத்தோடு, 20ஆவது அரசியலமைப்பில் திருத்தத்தை மேற்கொள்ளவும் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இதனையடுத்து, புதிய அரசியலமைப்பு உருவாக்கத்திற்காக அமைச்சரவை இணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், அதற்கு நீதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட 5 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## 5 மாதக்...

கைதடி நுணாவில் பகுதியில் இரவு பால் குடித்து விட்டு உறங்கிய 5 மாத ஆண் குழந்தை ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அசைவற்ற நிலையில் காணப்பட்ட குழந்தையை பெற்றோர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வந்த போதிலும் குழந்தை ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி நுணாவில் சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த கிசோபன் என்ற 5 மாதக் குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

பால் புரைக்கேறி மரணம் சம்பவித்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

குழந்தையின் சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஞா-30,114)

## விசர் நாய் கடித்த...

உயிரிழந்துள்ளனர்.

மன்னார் தாழ்வுபாட்டைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயான ஜெபநேசன் றிறாடோ கொன்சலியா டயஸ் (வயது - 39) என்பவருக்கும் அவருடைய மகனுக்கும் கடந்த மாதம் 13ஆம் திகதி நாய் கடித்துள்ளது.

மகனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற குறித்த பெண் மகனுக்கு ஊசி ஏற்றிவிட்டு தனக்கு ஊசி ஏற்றாமல் வந்துள்ளார் .

இந்த நிலையில் கடந்த 21ஆம் திகதி நெஞ்சு வலித்து மூச்சு அடைப்பதாக தெரிவித்து மன்னார் வைத்தியசாலைக்கு சென்றுள்ளார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும் வட்டுக்கோட்டை சங்கரத்தையை சேர்ந்த தவச்செல்வம் தர்சன் (வயது-15 ) என்ற மாணவன் கடந்த சில நாட்களுக்கு முன்னர் விசர் நாய்க்கடிக்கு இலக்காகியுள்ளார். ஆனால் வைத்தியசாலைக்கு செல்லாமல் இருந்துள்ளார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நெஞ்சு வலிப்பதாக தெரிவித்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தண்ணீரைப் பார்த்து இரவு முழுவதும் பயந்தபடி இருந்த குறித்த மாணவன் நேற்று அதிகாலை 2 மணிக்கு உயிரிழந்துள்ளார்.

இந்த மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா-9,18,104)

## காணாமல் ஆக்க...

சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது மேற்படி விடயம் தொடர்பில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த தேர்தலில் தனக்கு வாக்களித்த மக்களின் தேவைகள், பிரச்சினைகளை நிச்சயம் அமைச்சரவைக்கு எடுத்துச் செல்வதுடன் அரசின் அபிவிருத்தித் திட்டங்களுக்குள் வடக்கு, கிழக்கை நிச்சயம் இணைப்பதாகவும் அதனை எவரும் தடுக்க முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையின் 19ஆவது திருத்தச் சட்டம் நாட்டுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் தீங்கு விளைவிப்பதாக அமைந்திருப்பதாக அரசாங்கம் கருதுவதனால் மக்கள் அவர்களுக்கு வழங்கிய ஆணைக்கிணங்க அதனை மாற்றம் செய்ய முற்படுவதாகவும் இலங்கை கடல் எல்லைகளுக்குள் பிறநாட்டு மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாதெனவும் அதேபோல் உள்நாட்டில் காணப்படும் மீன்பிடி தொடர்பில், குறித்த மாவட்டத்தில் காணப்படும் மீனவர்களை பாதிக்காத வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஞா-10)

## 13ஆவது திருத்த...

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர் ஒருவர் 13ஆவது திருத்தச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு முதல் முறையாக யோசனை முன்வைத்துள்ளார்.

மாகாண சபைகள் நாட்டு மக்களால் தாங்கிக் கொள்ள முடியாத பொருளாதார சுமை எனவும் அவற்றால் நாட்டுக்கு எவ்வித சேவையும் நடந்ததில்லை எனவும் சரத் வீரசேகர சுட்டிக் காட்டியுள்ளார்.

எது எப்படி இருந்தபோதிலும் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக இந்தியாவின் தலையீட்டின் அடிப்படையில் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையில் மாகாண சபைகள் முறை ஏற்படுத்தப்பட்டது.

இந்திய - இலங்கை உடன்படிக்கையின் பிரகாரம் நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாகாண சபை முறையை ஒழிக்க வேண்டும் என சிங்கள தேசியவாதிகள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

மாகாண சபைகள் மூலம் நாட்டில் ஓரளவுக்கு அதிகாரங்கள் 9 மாகாணங்களுக்கு பகிரப்பட்டுள்ள போதிலும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் இது வரை மாகாணசபைகளுக்கு வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் ஆட்சிக்கு வந்துள்ள புதிய அரசாங்கம் கொண்டு வர உத்தேசித்துள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட சிறுபான்மை அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 23-08-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2518
M 13 26 41 71

தன நிதானய
திகதி - 2020.08.23
சீட்டிழுப்பு இலக்கம் - 306
Q 25 58 59 71

மெகா பவர்
திகதி 23/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0590
U 07 34 41 54 77

செவன
திகதி 23/08/2020
சீட்டிழுப்பு இலக்கம் 289
I 37 38 48 66

மஹஜன சம்பத
திகதி 2020/08/23
சீட்டிழுப்பு இலக்கம் 4223
A 7 3 3 3 2 1

2900 23.08.2020
10 12 21 58
ரூ. 2,335,968

16 43 46 67 S
ரூ. 63,367,955/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1197
சீட்டிழுப்பு திகதி 23.08.2020
U 11 18 50 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,610,057.20

C 29 57 68 72
615
23.08 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.
81,403,070
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

மீண்டும்

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
**100%** பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-133)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- **021 222 6113**

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- **021 222 3536**



**மணமகள் தேவை**

அரசதுறையில் பணிபுரியும் இந்து
கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977ம்
ஆண்டு, கிரகபாவம் 56 1/2 உடைய
மணமகனுக்கு அரசதுறையில்
பணிபுரியும் மணமகள் தேவை.
(3661)

**TEL : 077 719 3173**



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

*வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.*

தொடர்பு: **றாஜ் - 077 679 6623**
(3665)


## திருவெண்காட்டில் இன்று கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று காலை 8.00 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று அதனைத் தொடர்ந்து கொடியேற்றம் இடம்பெறும்.

கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகும் மகோற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (ஞா)


**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு
பொதிகளை எமக்கூடாக
அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-122)

**0768226240**



**வீடு வாடகைக்கு**

யாழ். நகர்ப்பகுதியில்
மாடி வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்களுக்கு உகந்தது)
(3661)

**TEL : 071 856 7567**



**வகுப்பு**

தரம் 6 - 11 வரை விஞ்ஞானம்
மற்றும் **A/L Chemistry**
கற்பிக்கப்படும்.
(3658)

ப. சிவறுக்ஷி [ B.Sc. (Hons) in chemistry ]
**076 674 6488**



**விற்பனைக்கு / குத்தகைக்கு**

2ஆம் குறுக்குத்தெரு பருத்தித்துறையில் (பருத்தித்துறை மத்திய சந்தைக்குப் பின்புறமாக ) 2 பரப்புக் காணியில் இரண்டு கடையுடன் கூடிய பேக்கரி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும்.

**நிறுவனமாகவும் அல்லது பேக்கரியாகவும் பாவிக்கும் வகையில் உள்ளது.**
**விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.**

தொடர்புகளுக்கு (C-131)
**077 421 5879**



**பாவித்த வீட்டுப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு**

- AC • மர, இரும்பு கட்டில்கள்
- Dressing Table • Fridge
- மேசை (மரம், பிளாஸ்ரிக்)
- மெத்தை • T.V

(3661)

**TEL : 071 856 7567**


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வல்லிபுரம் குமாரசாமி**

தோற்றம் 11.04.1933 மறைவு 04.09.2019

**திதி:-24.08.2020**

அன்பின் திருவுருவே! எம் மனதில்
அழியாத ஓவியமே...
ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாத துயரோடும் - உம்
அழியாத நினைவோடும்
ஆறவில்லை எம் மனது...
இற்று விடா இனிய வாழ்வு எமக்கழித்து
இறையடியை நாடிவிட்ட - உம்
பாதம் மலர் தூவி வணங்குகின்றோம்.

(3666)

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 12.08.2020 அன்று
கடற்றொழில் துறை
அமைச்சராகவும்
கிளிநொச்சி மாவட்ட
ஒருங்கிணைப்புக்
குழுத் தலைவராகவும்
பதவிப் பிரமாணத்தை
ஏற்றுக் கொண்ட
கௌரவ அமைச்சர்

**K.N டக்ளஸ் தேவானந்தா அவர்களை**
**மனதார வாழ்த்தி மகிழ்கின்றோம்.**

(3670)

கச்சாய் சாளம்பன் தீவு
பெரும்படை ஆலய நிர்வாகமும்
அடியவர்களும்


**காப்புறுதித் துறையில் வாழ்க்கையை மாற்றும்**
**ஒரு கூட்டிணைவை ஆரம்பித்திடுவோம்**

தொடர்ந்து 7 வருடங்கள் வேலை செய்வதற்கு
மிகச்சிறந்த இடம் என்ற (G.P.W) விருதினைப் பெற்ற
யூனியன் அஷ்யூரன்ஸ் இருந்து தொழில்வாய்ப்புகள்
யாழ்.பிராந்தியம்

◎ **முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**
◎ **உதவி முகாமையாளர் - வியாபார அபிவிருத்தி**

**முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**

◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 40,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்

**உதவி முகாமையாளர் – வியாபார அபிவிருத்தி**

◎ க.பொ.த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி
◎ அடிப்படை கொடுப்பனவு 30,000/= + மேலதிக 3 கொடுப்பனவுகள்



**உங்களது சுயவிபரக் கோவையினை அல்லது விண்ணப்பங்களை**
**10.09.2020க்கு முன்னர் sellaiyakiritharan89@gmail.com**
**என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**
**218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

UNION ASSURANCE
A JOHN KEELLS COMPANY

(C-127)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.